# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

ilakku.org

வாராந்த மின்னிதழ்

SUBSCRIBE US! youtube.com/c/IlakkuWeb

LIKE US! facebook.com/ilakku.ilakku.10

FOLLOW US! twitter.com/Ilakku1

இதழ் 287 | சனி, மே 18, 2024 | 18 பக்கங்கள்





## சிறிலங்காவின் முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழின அழிப்பின் 15 வது ஆண்டு நினைவேந்தல்.

நினைக்கையில் வலிக்கிறது வலியினை வலிமையாக்கி இறைமையை மீட்க அழைக்கிறது!






## போர் முடிந்த 15 வருடங்களில் ஈழத் தமிழரின் நிலை என்ன?

அகிலன்



## களத்திலே கருவான மாவீரனின் மகள் எழுதுகிறேன்...

அ.வி.முகிலினி

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்; மன்னிப்பு சபை செயலாளருக்கு சொல்லப்போகும் செய்தி என்ன?

சீலன் சிவயோகநாதன் செவ்வி


info@ilakku.org

© 2024 இலக்கு இணையம்

## நல்லூரில் தமிழின அழிப்பு கண்காட்சி



முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற இனப் படுகொலையை நினைவுகூரும் வாரத்தில் இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்ட கட்டமைக்கப்பட்ட இனஅழிப்பு மற்றும் மேற்கொள்ளப்பட்டுவரும் இனஅழிப்பு நடவடிக்கைகள் தொடர்பான கண்காட்சி ஒன்று நல்லூரில் கடந்த வியாழக் கிழமை(16) ஆரம்பிக்கப் பட்டிருந்தது.

நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபன் அவர்களின்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## அமெரிக்காவின் கவனத்தை ஈர்த்த தமிழ்ப் பொதுவேட்பாளர் விடயம்



தமிழ் பொது வேட்பாளர் விடயத்தை வலியுறுத்தும் சிவில் அமைப்புகள் சிலவற்றின் பிரதிநிதிகளை கடந்த புதன் கிழமை(15) யாழ்ப்பாணம் வந்த அமெரிக்க தூதுவர் ஜூலி சங் சந்தித்துப் பேசியுள்ளார்.

தமிழ் மக்கள் மத்தியில் தமிழ் பொது வேட்பாளர் விவகாரம் பரவலடைந்து – வரவேற்பை பெற்றுள்ள நிலையில் நிகழ்ந்த இந்த சந்திப்பு முக்கியத்துவம் பெற்றுள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ள இலங்கையர்களுக்கான தொடர்ச்சியான அமெரிக்க ஒத்துழைப்பு மற்றும் ஆதரவுக்கான வழிகளை ஆராய்வதற்காக சிவில் சமூகம்,

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## திருகோணமலை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை(12) திருகோணமலை மூதூர் பிரதேசத்துக்குட்பட்ட சீனன்வெளி விநாயகர் ஆலயத்தில் இடம் பெற்றது.

இலங்கை தமிழ் அரசு கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் தலைமையில்

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

## இறந்தவர்களுக்கான நினைவேந்தல் உரிமையை மறுக்கின்றது இலங்கை அரசு – கிழக்கு பல்கலைகக்கழகம்

திருகோணமலை சேனையூர் பகுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சியை பகிர்ந்து முள்ளிவாய்க்காலில் இனப் படுகொலை செய்யப்பட்ட மக்களை நினைவு கூர்ந்தவர்களை அநாகரீகமான முறையில் கைது செய்த இலங்கை பொலிசாரின் அத்துமீறலை கண்டிப்பதாக கிழக்கு பல்கலைக்கழக மாணவர்

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

## கோணாவில் – புதுக்குடியிருப்பில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு




தமிழினப் படுகொலை வாரத்தின் ஐந்தாவது நாளான வியாழக்கிழமை(16) புதுக்குடியிருப்பு கோம்பாவில் மற்றும் யூனியன்குளம் கோணாவில் பகுதியிலுள்ள கரிகாலன் கல்விக்கழகத்தில் இளைஞர்களின் ஏற்பாட்டில் இறுதி உயிரை காப்பாற்றிய உணவான முள்ளிவாய்க்கால் கஞ்சி

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

## ஸ்லோவாக்கிய நாட்டின் பிரதமர் மீது துப்பாக்கிச் சூடு

### ஆபத்தான நிலையில் அனுமதி



கூட்டம் ஒன்றில் கலந்த பின்னர் அங்கு கூடியிருந்த பொதுமக்களை சந்தித்தபோது கூட்டத்தில் இருந்த 71 வயதான நபர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஸ்லோவாக்கிய நாட்டின் பிரதமர் றொபேட் பிகோ பலத்த காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த புதன்கிழமை(15) இடம்பெற்ற இந்த சம்பவத்தில் பிரதமர் மீது 4 துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டபோதும் ஒரு சன்னமே அவரை தாக்கியுள்ளது.

2006 ஆம் ஆண்டு மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் இரு முறை பிரதமர் பதவியை வகித்த அவர் மூன்றாவது தடவையாக கடந்த ஒக்டோபர் மாதம் தெரிவு செய்யப் பட்டிருந்தார்.

உக்ரைனுக்கான ஆயுத உதவிகளை நிறுத்துவதுஇ உக்ரைன் நேட்டோவில் இணைவதை தடுப்பது மற்றும் பேச்சுக்கள் மூலமே உக்ரைன் பிரச்சனைக்கு முடிவு காண்பது போன்ற கோரிக்கைகளை முன்வைத்து தேர்தலில்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## ஆசிய–பசுபிக் பிராந்தியத்தில் படைத்துறைக் கூட்டணி ஆபத்தானது – பூட்டின்



ஆசிய-பசுபிக் பிராந்தியம் படைத்துறை பிரசன்னம் அற்றதாக இருத்தல் வேண்டும். அங்கு அமைக்கப்படும் கூட்டணிகள்ஆபத்தானவை என்பதுடன், அது விபரீதமான பின்விளைவுகளை ஏற்படுத்தும் என சீனாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ள ரஸ்ய அதிபர் விளமிடீர் பூட்டின் சீனாவில் பேசும்போது கடந்த வியாழக்கிழமை(16) தெரிவித்துள்ளார்.

ஆசிய-பசுபிக் பிராந்தியத்தில் படைத்துறை கூட்டணிகளை அமைத்தல் என்பது அந்த பிராந்தியத்தின் பாதுகாப்பை கேள்விக்குறியாக்கும். ஆசிய -பசுபிக் பிராந்தியத்தில் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## இந்திய உணவுப் பொருட்களில் ஆபத்தான புற்றுநோய் இரசாயனம் – நியூசிலாந்து




இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்களில் ஆபத்தான புற்றுநோய் இராசாயனப் பொருட்கள் உள்ளதாக நியூசிலாந்து தெரிவித்துள்ளதுடன், அது விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளது.

MDH and Everest ஆகிய நிறுவனங்கள் தயாரிக்கும் மசாலா பொருட்களில் கிருமிநாசினிகளில் உள்ள புற்றுநோய்களை ஏற்படுத்தும் எதிலீன் ஒக்சைட்டு

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## சர்வதேச குற்றவியல் விசாரணை தேவை – கஜேந்திரன்



சர்வதேச குற்றவியல் விசாரனை வேண்டும் நல்லிணக்க ஆணைக்குழுவை உருவாக்கி அரசாங்கம் சர்வதேசத்தை ஏமாற்றியுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

மூதூரில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் போது கைது செய்யப்பட்டவர்களின் நிலை தொடர்பில் வியாழக்கிழமை(16) சிரேஷ்ட சட்டத்தரணி க.சுகாஷ் செய்த சமர்ப்பணத்தின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் தெரிவித்த அவர் இந்த மாதம் தமிழர்களுக்கு வலி சுமந்த மாதமாகும் தமிழர்களை 15 வருட காலமாக ஏமாற்றி வரும் இந்த அரசு முள்ளிவாய்க்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# ஈழத்தமிழ் மக்கள் மீது இந்தியா தொடுத்துள்ள இராஜதந்திரப்போர்

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை இந்திய அரசு கடந்த செவ்வாய்க்கிழமை(14) மேலும் ஐந்து வருடங்களுக்கு நீடித்துள்ளது. இலங்கை அரசின் மிகப்பெரும் இனப்படுகொலையில் 146,000 ஈழத்தமிழ் மக்கள் சில மாதங்களில் கொல்லப்பட்ட நினைவுநாளை உலகம் எங்கும் வாழும் தமிழ் மக்கள் மிகுந்த மனவேதனையுடன் நினைவுகூர்ந்துவரும் இந்த நாளில் இந்தியா மீண்டும் தமிழ் மக்கள் மீது தனது வன்மத்தை வெளிப்படுத்தியுள்ளது.

தனது நாட்டு நலனுக்கு ஈழத்தமிழ் மக்கள் ஆபத்தானவர்கள் என்பதை நேரிடையற்ற முறையில் அவர்களின் தனிநாட்டுக் கோரிக்கை இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது என்று தனது தடையில் தெரிவித்துள்ள இந்தியா, சிங்கள மக்கள் இந்தியாவின் நண்பர்கள் என்று மறைமுகமாக மீண்டும் தமிழ் மக்களுக்கு உணர்த்தியுள்ளது.

இந்தியாவின் இந்த நிலைப்பாடு என்பது இந்தியா எந்த நிலையிலும் தமிழ் மக்களுக்கு எதிரான தனது நிலைப்பாட்டில் இருந்து மாறப்போவதில்லை என்பதை உணர்த்தியுள்ளதுடன், அது தமிழ் மக்களுக்கு எதிராக தொடர்ந்து செயல்படும் என்பதையும் தெளிவு படுத்தியுள்ளது.

ஐக்கியநாடுகள்சபையின்தீர்மானத்தைஎதிர்ப்பது அல்லது அதற்கு ஆதரவு வழங்காதுவிடுவது என்ற நிலைப்பாடுகளை தொடர்ந்து கடைப்பிடித்துவரும் இந்தியா எதிர்வரும் காலத்தில் தமிழ் மக்கள் மீதும் தேசிய செயற்பாட்டளர்கள் மீதும் நாசவேலைகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளளதையே இந்த தடை காட்டுகின்றது. எனவே தான் புலம்பெயர் நாடுகளிலும் தாயகத்திலும் உள்ள தமிழ் மக்கள் தமது இலட்சியத்தை கைவிடாது தொடர்ந்து பணியாற்றி வருவதாக தடை குறித்த அறிக்கையில் இந்தியா தெளிவாக தெரிவித்துள்ளது.

அதாவது புலம்பெயர் நாடுகளில் உள்ள சில தமிழ் அமைப்புக்களின் ஊடாக இந்திய அரசின் முகவர்கள் மற்றும் அரசியல்வாதிகள் மேற்கொள்ளும் உறவுகள், தமிழர் தாயகத்தில் அமைக்கப்படும் இந்திய துணைத்தூதரகங்கள், தமிழர் தாயகத்தில் மேற்கொள்ளப்படும் இந்தியாவின் அபிவிருத்தி திட்டங்கள் அனைத்தும் தமிழ் மக்களின் போராட்ட சிந்தனை மற்றும் தனிநாட்டுக்கான இலட்சியம் ஆகியவற்றை அழிப்பதற்கான முயற்சி என்பதை இந்தியாவின் இந்த தடை நீடிப்பு தெளிவுபடுத்தியுள்ளது.

ஆனால் தமிழீழ விடுதலைப்புலிகள் எவ்வாறு தாயகத்தில் கால்பதிக்கும் இந்தியாவை எதிரியாகவும், இந்தியா என்ற நாட்டை நண்பனாகவும் பார்த்தார்களோ அதேபோலவே தாயகத்து மக்களும் தற்போதும் பார்க்கின்றனர். எனவே தான் திருமலை சம்பூரில் இந்தியாவின் அபிவிருத்தித் திட்டங்களை எதிர்க்கும் தமிழ் மக்கள், தற்போது மன்னாரில் அமைக்கப்படும் இந்தியாவின் அதானி குழுமத்தின் காற்றாலை மின்னுற்பத்தி நிலையத்திற்கும் எதிராக போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

இந்தியாவின் கப்பல் சேவையையோ அல்லது விமான சேவையையோ கூட தமிழ் மக்கள் வரவேற்கவில்லை. எனவே தான் நட்டத்தில் இயங்கும் அதனை தமிழ் மக்களை தொடர்ந்து கண்காணிக்கும் நோக்கத்துடன், இந்தியா தனது நிதியை போட்டு நடத்தி வருகின்றது.

ஈழத்தமிழ் மக்களின் கடல்வளத்தை கொள்ளையடித்து மற்றும் அபிவிருத்தி என்ற போர்வையில் அவர்களின் நிலங்களை இலங்கை அரசுடன் இணைந்து கையகப்படுத்தி தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தை அழித்துவரும் இந்தியாவின் செயற்பாடு என்பது ஈழத்தமிழ் மக்கள் மீது இந்தியா மேற்கொண்டுவரும் பொருளாதாரப்போராக தாயகத்து தமிழ் மக்கள் பார்த்துவரும் அதேசமயம், தற்போதைய தடை நீடிப்பு என்பது ஈழத்தமிழ் மக்கள் மீது இந்தியா தொடுத்துள்ள இராஜதந்திரப்போராக ஈழத்தமிழ் மக்கள்

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

ஆசிரியர் தலையங்கம்

# சிறிலங்காவின் முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழின அழிப்பு தந்த வலியை இறைமையை மீட்கும் வலிமையாக்குவோம்

ஈழத்தமிழர் தாயகத்திலும் உலகெங்கும் உள்ள ஈழத்தமிழர்களுக்கும் தமிழகம் உட்பட்ட அனைத்து நாடுகளில் உள்ள தமிழர்களுக்கும் மே 18, 176000 தமிழர்களை மனிதவதை செய்து சிறிலங்கா இனஅழிப்பு செய்த 2009 ஆண்டு மே 18 இன் வரலாற்று நினைவு நாளாக-தாங்கொணா வலி தரும் நாளாக ஒவ்வொரு ஆண்டும் அமைகிறது.

இவ்வாண்டு 15 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள இந்த மே 18-சிறிலங்காவின் முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழின அழிப்பு நாள் தந்த வலியை இறைமையை மீட்கும் வலிமையாக்குவோம் என்ற உறுதி மொழியுடன் ஈழத்தமிழர்கள் தாயகத்திலும் உலகெங்கும் வீறு கொண்டெழுந்து கொண்டாடுகின்றனர்.

2009 முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழின அழிப்பு என்பது 1921 முதலான 88 ஆண்டுகால சிங்கள இனவெறியின் பௌத்த மதவெறியின் திட்டமிட்ட அரசபயங்கரவாத வெளிப்பாடு. ஈழத்தமிழர்களின் அனைத்து வாழ்வாதாரங்களையும் குண்டு வீச்சுக்கள் எறிகணை வீச்சுக்களால் அழித்து ஒழித்து ஈழத்தமிழர்களை இனப்படுகொலை செய்வது மட்டுமல்ல அவர்களின் அனைத்து வாழ்வுக்கான உட்கட்டுமானங்களையும் அழித்தல் என்பதே சிறிலங்காவின் முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழினப்படுகொலையின் தலைமை நோக்கு.

இன்று பலஸ்தீனத்தில் பலஸ்தீனிய மக்களை இஸ்ரேயல் அவர்கள் வாழ்ந்து வரும் வீடுகளை விட்டு வெளியேற்ற எவ்வாறு 35000க்கும் அதிகமான பலஸ்தீனிய மக்களை குழந்தைகள் சிறுவர்கள் பெண்கள் முதியவர்கள் இயலாமையில் உள்ளவர்கள் என்று பார்க்காது குண்டுமழை பொழிகின்றதோ அவ்வாறு அன்று 2009 இல் சிறிலங்கா இவற்றையும் இவற்றைவிடக் கொடூரமான முறையில் தமிழர்களை நிர்வாணமாக்கி ரசித்துப் படமெடுத்து வன்புணர்ச்சி செய்து போராட வலுவுள்ளவர்கள் எனத் தாங்கள் கருதிய அனைவரையும் கொன்று குவித்து, உடலங்களைக் கூட மனிதத்தன்மையற்று நிர்வாணப்படுத்தி பொதுவெளியில் காட்சிப்படுத்தி, கிண்டல் கேலி செய்து கிட்லரிசத்தை விட மோசமான வதைமுகாம்களை நிறுவியது.

இந்த முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழின அழிப்பால் "இனஅழிப்பால் நில ஆக்கிரமிப்பைச் செய்யலாம்" அதனை தமக்கு ஆதரவான நாடுகள் அனைத்துலகச் சட்டங்கள் விசாரணைக்கு உள்ளாக்காதவாறு தடுக்கும் என்ற புதிய அரசியல் கோட்பாட்டை உலகுக்கு அறிமுகப்படுத்தியது.

இதுவே கடந்த வெள்ளிக்கிழமை தென்னாபிரிக்கா ரவா மேலான இஸ்ரேலியச் செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்தி இஸ்ரேயலை அது ஆக்கிரமித்துள்ள பலஸ்தீன எல்லைகளில் இருந்து வெளியேறுமாறு உத்தரவிடுமாறு அனைத்துலக நீதிக்கான நீதினமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கில் இஸ்ரேயல் சிறிலங்காவைப் போலவே காசாவில் எந்த இனஅழிப்பும் நடைபெறவில்லையென வெளிப்படையாக அறிவிக்க வைத்துள்ளது.

அன்று முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழின அழிப்பில் பிராந்திய ஆசிய மேலாண்மைகளும் அமெரிக்க மேற்குலக வல்லாண்மைகளும் தங்கள் தேவைகளுக்கு ஏற்ப மறைமுகமாகப் பங்கேற்று இனஅழிப்பால் அரசியல் நடத்துங்கள் எங்களின் சந்தை மற்றும் பாதுகாப்பு நலன்களுக்கு நீங்கள் ஆதரவு அளித்தால் போதுமென்று அனைத்துலகச் சட்டங்களில் இருந்து சிறிலங்காவுக்கு விதி விலக்களித்தமையாலேயே ஈழத்தமிழர்கள் இன்றும் சிறிலங்கா என்னும் தங்களை ஆளும் அரசியலமைப்புத் தகுதியை 22.05. 1972 இல் சோல்பரி அரசியலமைப்பை வன்முறைப்படுத்திச் சிறிலங்கா சிங்கள பௌத்த குடியரசை நிறுவியதால் சிறிலங்கா இழந்து விட்ட போதிலும், படைபல ஆக்கிரமிப்பால் தமது அரசியல் பணிவை வலுக்கட்டாயமாகப் பெறும் வாழ்வில் ஈழத்தமிழர்கள் தொடர்ந்து இனஅழிப்பு இனத்துடைப்பு பண்பாட்டு இனஅழிப்புக்கு உள்ளாகி வருகின்றனர். இதே நிலைதான் பலஸ்தீனத்திலும். ஆனால் ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் ஈழத்தமிழர்களின் நடைமுறையரசின் இறைமையை ஒடுக்கவே சிறிலங்கா செய்தது எனச் சொல்லத் தயங்குவதால் இன்றும் ஈழத்தமிழரால் தங்களின் தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் அனைத்துலகத் தீர்வு எதனையும் பெற இயலவில்லை. இதனைச் சிங்களச் சட்டதரணியான சிறிநாத் பெரேரா வீரகேசரிக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார். அதுமட்டுமல்ல முதலாளித்துவ கட்சியாகத் தன்னை மாற்றியுள்ள தேசிய மக்கள் சக்தியும் ஈழத்தமிழர்களுடைய தன்னாட்சி உரிமையை தராது எனத் தெளிவாகக் கூறியுள்ளார்.

இந்நிலையில் தன்னாட்சி உரிமை வேண்டுமெனக் கூற தமிழரிடையே ஒற்றுமை வேண்டும். யாழ்ப்பாணத்திற்கு தான் தனது இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பொறுப்பில் இருந்து விலகுமுன் கடந்த வாரத்தில் சென்றிருந்த அமெரிக்கத் தூதுவர் யூலி சங் அவர்கள் நீங்கள் ஒற்றுமையாக வராது விட்டால் தீர்வு குறித்து என்னால் பேச இயலாது என முகத்தில் அடித்த மாதிரி ஈழத்தமிழ் அரசியல் வாதிகளுக்குத் தெரிவித்துள்ளார். இலங்கைக்கான பிரித்தானியத் தூதுவரும் தன்னிடம் ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் எவரும் எத்தகைய தீர்வு குறித்தும் பேசவில்லை என்று கூறியுள்ளார். தூதரங்களால் இலங்கைத் தீவின் அரசியல் எதிர்காலம் திட்டமிடப்படும் இந்நேரத்தில் முள்ளிவாய்க்காலில் ஈழத்தமிழர்கள் எதற்காக தங்கள் இன்னுயிர்களைத் தியாகம் செய்தார்களோ அதனை ஈழத்தமிழர்களின் முடிந்த முடிவாக வெளிப்படுத்திச் செயற்படும் ஆண்டாக 2024 அமைய வேண்டும் என்பது இலக்கின் முள்ளிவாய்க்கால் 15வது நினைவேந்தல் அழைப்பாகவுள்ளது.

பொதுவேட்பாளர் சிந்தனை ஈழத்தமிழரிடையே வேகம் கொண்டுள்ள நிலையில் எதற்குப் பொதுவேட்பாளர் ஈழத்தமிழர் இறைமையின் அடிப்படையில் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை முன்னெடுக்கவா அல்லது இந்திய நோக்கான அனைத்தையும் இழந்து விட்ட 13ஐ நடைமுறைப்படுத்தவா என்பதை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளிலாவது ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் தெளிவுபடுத்த வேண்டும். முள்ளி வாய்க்கால் கஞ்சிக்கு கூட தண்டனை வழங்க முற்படும் அரசின் எந்தத் தேர்தலையும் சனநாயகவழியில் புறக்கணிப்பது ஒன்றுதான் ஈழத்தமிழரின் இறைமையை உறுதிப்படுத்த ஒரேவழி.

ஆனால் ஈழத்தமிழர் இறைமையை ஒடுக்க இந்தியா தனது கண்ணியமான தீர்வு என்று 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துங்கள் என்று இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் 13வது பிரிவும் அது உருவாக்கிய வடக்கு கிழக்கு ஒரே நிர்வாக அலகு என்ற இணைப்பும் அனைத்துச் சிங்களத் தலைமைகளாலும் மீறப்பட்டு பொலிஸ் அதிகாரமற்ற நில உரிமையற்ற சிங்கள அரசின் ஜனாதிபதியின் நிதி நிர்வாகப் பரவலாக்கலுக்கான புதிய 13வது திருத்தத்தை ஈழத்தமிழர்களின் தேசியப் பிரச்சனைக்குத் தீர்வாக்க முயல்கிறது. எரிக்சொல்கைம் ஈழத்தமிழர் தாயகத்தில் சிறிலங்கா மேற்கொள்ளும் புதிய பொருளாதார முயற்சிகளுக்கு அனைத்துலக சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சான்றிதழ் பெற்றுக் கொடுப்பதுடன் கூடவே 13ஐ ஏற்பதே நன்று என அரசியலிலும் நெறிப்படுத்தல் செய்கின்றார்.

ஆனால் அவுஸ்திரேலியாவில் இலங்கையில் யுத்தக் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் இன்று வரை அரசாங்கத்திலும் இராணுவத்திலும் உயர் பதவிகளில் உள்ளனர். இன்று வரை ஈழத்தமிழர்கள் பாதுகாப்பற்றவர்களாக ஒடுக்குமுறையை எதிர் கொள்கின்றனர் என கிறீன்ஸ் கட்சியின் செனட்டர் டேவிட் சூபிரிஜ் உண்மையை வெளிப்படுத்தியுள்ளார்.

அமெரிக்க காங்கிரசில் சிறிலங்காவின் ஆட்சியாளர்கள் இனப்படுகொலையில் ஈடுபட்டனர் என்பதைக் காங்கிரஸ் ஏற்கவேண்டும் என்ற முன்மொழிவு வைக்கப்பட்டுள்ளது. இதனை காங்கிரஸ் ஏற்குதோ இல்லையோ ஆனால் உலகளாவிய நிலையில் உண்மைகள் உலக மக்களுக்குத் தெளிவாகத் தொடங்கியுள்ளது என்பதற்கு இதுவும் உதாரணமாகிறது.

ஆனால் இவற்றுக்கு வலுவூட்டுவதற்கு ஈழத்தமிழர்கள் தாயகத்திலும் உலகிலும் தாங்கள் இறைமையுள்ள மக்கள் தங்களின் இறைமையை மீள்வித்தல் பிரிவினைவாதமல்ல. தங்களை சிறிலங்கா அரசபயங்கரவாதம் 1970 முதல் 1978 வரை காரணமின்றிக் கைது செய்து விசாரணையின்றி தடுத்துவைத்து இனவழிப்புச் செய்து அதன் உச்சமாக 1979 டிசம்பருக்குள் எல்லா அரசியல் விழிப்புணர்ச்சி உள்ள தமிழர்களையும் கண்ட இடத்தில் சுடவும் சுட்ட இடத்தில் எரிக்கவும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தைக் கொண்டு வந்த அடிப்படையிலேயே ஈழத்தமிழர்களின் ஆயுதப் போராட்டம் இனஅழிப்புக்கான தற்பாதுகாப்புப் போராட்டமாகவே தொடங்கியது. இது பயங்கரவாதமல்ல என்ற உண்மைகளை பலமாக வெளிப்படுத்த வேண்டும். 2024ம் ஆண்டை ஈழத்தமிழர்களும் உலகெங்கும் உள்ள ஈழத்தமிழர்களும் இணைந்து ஈழத்தமிழர் இறைமையை அவர்கள் மீளக்கட்டமைப்பது பிரிவினையும் அல்ல அதற்கான அவர்களின் சனநாயக ரீதியான செயற்பாடுகள் பயங்கரவாதமுமல்ல என்பதனை உலக மக்களுக்கு உறுதியுடன் வெளிப்படுத்த இலக்கு மீளவும் அழைக்கின்றது. அப்பொழுதுதான் முள்ளிவாய்க்கால் தந்த வலி வலிமையாகி மக்கள் பாதூப்பான அமைதி வாழ்வு பெறுவர்.

**ஆசிரியர்**

# மே..18
# இன அழிப்பின் அடையாளம்

மே..18.. எம்
இதயத்தின் சுவரில்
இடி விழுந்த மாதம்...
தமிழினப் படுகொலையை
பறைசாற்றும் மாதம்..
யார் அறிவார்... எம்
வலியை..??
வலிக்கான வழியை..
படிப்போம்...
இனியொரு நாளில் அந்த
பெரு வரலாற்றை படைப்போம்..!!

முள்ளிவாய்க்கால் - எம்
இன அழிப்பின் நினைவுச் சின்னம்,
அது...அழுகுரலின் தலை நகரம்!

இனப்பகையும் விசப்புகையும்
எம் மூச்சுக்காற்றைக் குடித்த இடம்
முள்ளிவாய்க்கால் பெருநிலம்!

நந்திக் கடேலாரம் .. எம்மை
வஞ்சித்த நாடுகளை
நாங்கள் சந்தித்த நிமிடத்தில் - எம்
சந்ததிகளை தொலைத்தோம்!

வெள்ளைக் கொடியேந்தி
எம் சமாதானப் புறாக்கள்
எம் கண்முன்னே மாண்டதை
கண்ணுற்றோம்!

பாஸ்பரஸ் குண்டுகளில் வடிந்த
கந்தகக் காற்றை நித்தம் நித்தம்
சுவாசித்தோம்!

குருதியாற்றில்
கொத்துக் கொத்தாக
எமது உறவுகள் தத்தளித்ததை
மறக்க முடியுமா எம்மால்???

வெள்ளி முளைக்குமென
விழித்திருந்த தேசத்தில்
கொள்ளி வைக்கப்பட்ட
முள்ளிவாய்க்காலை
மறக்க இயலாது!

முள்ளிவாய்க்கால்
இன அழிப்பின் குறியீடு
பேரவலத்தின் பெயர்ச்சொல்..

சிங்கள ஓநாய்கள் ஒன்றுகூடி
குருதி குடித்த களம்
முள்ளிவாய்க்கால் பெருநிலம்!

அன்று
நசிங்கிய குரலைத் திறந்து
தொண்டை கிழிய கதறினோம்!
பொசிங்கிய உயிரை துறந்து
எலும்புக்கூடாய் புலம்பினோம்!

உலகநாடுகளின் காதுக்கதவுகள்
திறக்கவேயில்லை! இன்றும்
அந்த...அறத்தின் திறவுகோல்
பிறக்கவே இல்லை!

பாருங்கள்... இன்றும் நாங்கள்..
உறவுகள் துறந்துவிட்டு
இரவுகள் சுமக்கிறோம்!
முகவரி இழந்துவிட்டு
அகதியாய் திரிகிறோம்!

இறந்த தாயின் மார்பில்
பசிக்கு பால் தேடும் குழந்தைகளின்
இரத்த சாட்சிகளின்
கோரக்காட்சிகள் எந்த மண்ணில்
இதுவரை எங்கே...நிகழ்ந்தது?

மரத்தை வெட்டினால் கூட
மன்னிக்க மறுக்கும்
இவ்வுலகில்
மனிதர்களை வெட்டினார்களே!
ஏன் மறுத்தது
மனிதம் பேசுகிற இந்தமானுடம்?
சிந்தித்திருப்போமா...?

கொலையுண்ட நாங்கள்
அரை நூற்றாண்டுக்கு மேலாக
அலறுகிறோமே!
எங்களுக்கான நீதி
ஏன்? நெளிந்து கொண்டே போகிறது!

காதுகள் பூட்டிய பொய்க் கயவர்களே..
உங்களுக்கு இதயம் இருக்கிறதா
இல்லையா?..

இது வரை அறமன்றங்கள் என்ன
செய்து கிழித்திருக்கிறது!
மனச்சான்றோடு சொல்லுங்கள்!

இன்னும் இன்னும் கணக்கற்ற
எலும்புக் கூடுகளாய் உறங்குகிறது
எம் உறவுகளின் உடல்கள்!

நீதி தோண்டி எடுக்கும் என
நாங்கள் இன்னும் எத்தனை
நாட்கள் நம்புவது!.. பதிலுரையுங்கள்..

ஆனாலும் இன்னும்
முடியவில்லையே
சிங்களவனின் இனவெறி!
அது வெவ்வேறு
வடிவங்களில் அல்லவா
சுழலுகின்றன!.. புரியவில்லையா...?

எமது வீடுகளில் எங்களை
அகற்றி சிங்களன் குடிபெயர்கிறான்
எமது காணி நிலத்தை களவாடி
அவன் பயிர் செய்கிறான்!
எமது மொழியை மாண்பை
அகற்றி பண்பாட்டை
படையில் ஏற்றுகிறான்! ஏன்?

நாங்கள் கட்டிய
புறாக்கூட்டில் பாம்புகள்
படுத்துறங்குவதை
அனுமதிப்பது...ஏன்..??
இது தான்
வல்லாதிக்க நாடுகளின் தீர்வா?

பேரணி..பேரணியாய்
கூட்டம் கூட்டமாய்
அறவழியில் அன்றாடம்
அலைகிறோம்
ஐ.நா. வாசலின் முன்பு

இன்னுமா!
கொலைச்சான்றுகள்
தேடுகிறது இந்த ஐ.நா.?

எத்தனை ஆவணங்கள்
எத்தனை சாட்சிகள்
எத்தனை முறை மான்றாடல்
எத்தனை முறை அழுகுரல்
இன்னுமா உரைக்கவில்லை!

ஆண்ட இனத்தின்
அடிச்சுவட்டை
உலக ஆண்டைகள்
அசைத்துப் பார்த்ததை
எமது இனம்
எப்போதும் மறக்காது..

விடுதலை
இலட்சியத்திற்காக தமது
வித்துடலை விதையாக
விதைத்து வீர ஈழமண்ணை
ஈகத்தால் நிரப்பிய நாடு
எமது தமிழீழ நாடு!

2009 மே 18
தமிழர் இனப்படுகொலை
உலகம் பார்க்க நடந்தேறியது!
யார் காதுக்கும்
அந்த ஓலம் கேட்கவே இல்லை!
இன்றும்.. அந்த குரல்
ஒலித்துக் கொண்டுதான்
இருக்கிறது...

எமது மண்ணுக்காக
உயிர் நீத்த மாவீர மக்களை
எமது வரலாறு
புகழ்ந்து எழுச்சிக் கொள்ளும்!

மே.. 18
தமிழின அழிப்பு நாளில்
எம் ஈகியரின் இலட்சியக் கனவை
நெஞ்சில் எழுதிக் கொள்வோம்!

மே 18
முள்ளிவாய்க்கால் நினைவும்
நந்திக்கடல் ஈரக்காற்றின் அதிர்வும்
எம்மை எப்போதும்
எழுப்பிக் கொண்டே இருக்கும்

சூரியன் மறைந்தாலும்
மடியாது -
இலட்சிக் கனவுகள்
வெல்லாமல் போகாது!

-கவிபாஸ்கர்-



# போர் முடிந்த 15 வருடங்களில் ஈழத் தமிழரின் நிலை என்ன?

அகிலன்

உள்நாட்டுப் போர் முடிவடைந்து பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகும், தமிழர்களின் வாழ்வில் மோதலின் வடுக்கள் ஆழமாகப் பதிந்துள்ளன. துப்பாக்கிகள் மௌனமாகிவிட்ட நிலையில், நீதி, நல்லிணக்கம் மற்றும் உண்மையான அமைதிக்கான தேடுதல் தொடர்கிறது. அது கிட்டிய தொலைவில் இல்லை என்பதை தமிழர் தாயகப் பகுதிகளில் இடம்பெறும் சம்பவங்கள் தெளிவாக உணர்த்தி நிற்கின்றன.



முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் குவியும் மக்களும், அதனைத் தடுப்பதற்கு பாதுகாப்புத் தரப்பினர் தொடர்ந்தும் முன்னெடுக்கும் முயற்சிகளும், தமிழர்களுக்கு நினைவேந்தும் உரிமையைக் கொடுப்பதற்குக் கூட, சிங்களத் தரப்பினர் தயாராக இல்லை என்பதை வெளிப்படுத்தியிருக்கின்றது. போர்க் காலத்தில் நடப்பதைப் போலத்தான் பொலிஸார் திருமலையில் கடந்த வாரம் நடந்து கொண்டிருக்கின்றார்கள். நினைவேந்தலைகளை தடுப்பதற்கான ஆணையை வழங்குவதன் மூலம் இலங்கையில், தமிழர்களுக்கான நீதி எவ்வாறிருக்கும் என்பதும் நீதிமன்றங்களால் உணர்த்தப்படுகின்றது.



சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் *Agnès Callamard* அம்மையார் முதல் முறையாக இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் பின்னணியில்தான் இந்த அடாவடித் தனங்கள் அரங்கேற்றப்பட்டது. இதன் மூலம் சிங்கள ஆளும் வர்க்கம் தமிழர்களுடைய உரிமைகள் தொடர்பில் எவ்வாறான அணுகுமுறையைக் கையாளும் என்பது தெளிவாக உணர்த்தப்பட்டிருக்கின்றது. *Agnès Callamard* முள்ளிவாய்க்காலுக்கும் செல்வது தமிழர்களைப் பொறுத்தவரையில் மிகவும் முக்கியமானது. இது சர்வதேசத்தின் கவனத்தையும் முள்ளிவாய்க்காலின் பக்கம் ஈர்க்கக்கூடிய ஒரு நிகழ்வு!

### இராணுவ மயமாக்கல்

யுத்தம் தமிழர்களுக்கு பாரிய இழப்பை ஏற்படுத்தியது. குறிப்பாக இறுதிக்கட்டப் போர் சர்வதேச மனிதாபிமான சட்டங்களுக்கு முரணாக முன்னெடுக்கப்பட்டது. ஆயிரக் கணக்கானோர் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்கள். பரவலான பொதுமக்கள் உயிரிழப்புகள் மற்றும் உள்கட்டமைப்பின் அழிவு ஆகியவை நீண்ட நிழலாகத் தொடர்கின்றன. யுத்தத்தின் நீடித்த பேரதிர்ச்சியானது, அதிகளவு மனநலப் பிரச்சினைகள் மற்றும் சிங்கள பெரும்பான்மை அரசாங்கத்தின் மீது ஆழமான அவநம்பிக்கை உணர்வில் வெளிப்படுகிறது.



வடக்கு மற்றும் கிழக்கில் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் இராணுவப் பிரசன்னம் இந்த அந்நிய உணர்வை மேலும் தூண்டுகிறது. தமிழர்களின் முக்கிய கோரிக்கையான இராணுவத்தை வெளியேற்றுதல் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இராணுவம் இந்த பிராந்தியங்களில் ஆதிக்கம் செலுத்தும் சக்தியாக தொடர்கிறது. பொது நிகழ்வுகளில் அழையா விருந்தாளிகளாக அவர்கள் பங்கேற்கிறார்கள். இது தமிழர் மக்களின் சுயாதீனமான நடமாட்டங்களுக்குத் தடையாகவே இருக்கின்றது.

தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் பொருளாதார மீட்சி மெதுவாகவும் சீரற்றதாகவும் உள்ளது. யுத்தம் வாழ்வாதாரத்தை சீர்குலைத்தது. உள்கட்டமைப்பை அழித்தது. பாரபட்சமான கொள்கைகள் மற்றும் அரசாங்க சேவைகள் மற்றும் வளங்களுக்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகல் ஆகியவை தேசியப் பொருளாதாரத்தில் தமிழர்களின் பங்களிப்பைத் தொடர்ந்து தடுக்கின்றன. சிங்கள தெற்குடன் ஒப்பிடுகையில் தமிழ் பகுதிகளில் வேலையின்மையும் வறுமையும் கணிசமான அளவில் அதிகமாகவே உள்ளது. இதனை புள்ளி விபரங்களும் உறுதிப்படுத்துகின்றன.

### நீதிக்கான தடைகள்

போரின் விளைவாக உருவான முக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் இலங்கை அரசாங்கம் சிறிதளவுகூட உண்மையான அர்ப்பணிப்பைக் காட்டவில்லை. போர்க்குற்றங்களுக்கு பொறுப்புக்கூறல் என்பது மழுப்பலாகவே உள்ளது. நல்லிணக்கத்திற்கான முயற்சிகள் மட்டுப்படுத்தப்பட்டதாகவும், மேல்மட்டத்தில் இருந்தும், தமிழ் மக்களின் குறைகளை நிவர்த்தி செய்யத் தவறிவிட்டதாகவும் இருக்கின்றது.



சர்வதேச சமூகம், விசாரணைகளுக்கான ஆரம்ப அழைப்புகள் இருந்தபோதிலும், சமீபத்திய ஆண்டுகளில் பெரும்பாலும் முடக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இலங்கை அரசாங்கத்தின் மீதான சர்வதேசத்தின் அழுத்தங்கள் குறைந்துவிட்டன. மேலும் சர்வதேசத் தலையீட்டின் மூலம் நீதி கிடைக்கும் என்ற தமிழர்களின் நம்பிக்கை தொலைவில் உள்ளது. தமிழர்கள் அதில் முற்றாகவே நம்பிக்கை இழந்துவிட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

சவால்கள் இருந்தபோதிலும், தமிழ் சமூகம் குறிப்பிடத்தக்க மீட்சியை வெளிப்படுத்தியுள்ளது. தமிழர்கள் தலைமையிலான அடிமட்ட அமைப்புகளும் முன்முயற்சிகளும் போரின் பின்விளைவுகளைச் சமாளிப்பதற்கான முயற்சிகளை முன்னெடுத்துள்ளன. இந்த முன்முயற்சிகள் போர்க் குற்றங்களை ஆவணப்படுத்துதல், மனநல விழிப்புணர்வை ஊக்குவித்தல் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு ஆதரவளிப்பதில் கவனம் செலுத்துகின்றன.

புலம்பெயர் தமிழர்கள் இலங்கையில் உள்ள தமிழர்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்து வருகின்றனர். அவர்கள் சர்வதேச அமைப்புகளை வற்புறுத்தியுள்ளனர். அதற்காக அழுத்தம் கொடுக்கின்றார்கள். நடந்து வரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்திவருகிறார்கள். புலம்பெயர்ந்தோரின் வளங்களும் செல்வாக்கும் குறிப்பிடத்தக்கதாக இருக்கும் அதே வேளையில், இலங்கையின் நிலைமையை நேரடியாக பாதிக்கும் அவர்களின் திறன் குறைவாகவே உள்ளது. பொருளாதார ரீதியாகவும் போரின் பாதிப்புக்களிலிருந்து தாயக மக்கள் மீளெழுவதற்கு புலம்பெயர்ந்தவர்களின் உதவிகள்

தொடர்ச்சி 11ஆம் பக்கம்



# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ; மன்னிப்பு சபை செயலாளருக்கு சொல்லப்போகும் செய்தி என்ன?

**சீலன் சிவயோகநாதன்** செவ்வி

**முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஆரம்பமாகியுள்ள நிலையில் காவல்துறையின் அடாவடித் தனங்களும் தீவிமடைந்துள்ளன. இந்தக் காலப் பகுதியில் சர்வதேச மன்னிப்புச் சபையின் பொதுச் செயலாளர் இலங்கை விஜயத்தை மேற்கொள்கிறார். முள்ளிவாய்க்காலுக்கும் செல்லும் அவர் அங்கு நடைபெறும் நிகழ்விலும் பங்கேற்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இவை குறித்து அரசியல்-சமூக செயற்பாட்டாளராக சீலன் சிவயோகநான் அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலியின் தாயகக்களம் நிகழ்ச்சிக்கு வழங்கிய நேர்காணலை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம். இந்த நேர்காணலை காணொளியில் YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**

**முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஆரம்பமாகியிருக்கும் நிலையில், அதிகரித்துள்ள கெடுபிடிகள் குறித்து உங்கள் கருத்து என்ன?**

மிக மோசமான சம்பவங்கள் பதிவாகிக் கொண்டிருக்கின்றது. சம்பூர் சேனையூர் பிரதேசத்தில் ஒரு கோவிலில் முள்ளிவாய்க்கால் கஞ்சி தயாரிக்கப்பட்டுக்கொண்டிருந்த போது பொலிஸார் அங்கு வந்து நீதிமன்ற தடை உத்தரவைக் கொண்டுவந்து அந்த இடத்தில் கஞ்சி காய்ச்சக்கூடாது என்ற வகையில் பிரச்சினையை ஏற்படுத்தினார்கள். ஆனால், அதனையும் மீறி கஞ்சி தயாரிக்கப்பட்டு கொடுக்கப்பட்டது.

ஆனால், இரவு 8.30 மணியளவில் அதில் சம்பந்தப்பட்டவர்களின் வீடுகளுக்குச் சென்ற பொலிஸாரால் மூன்று பெண்கள் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டனர். மிகவும் மோசமாக-அநாகரீகமான முறையில் அந்தக் கைதுகள் இடம் பெற்றன. அங்கிருந்த பெண்கள் உடைகளை மாற்றுவதற்குக்கூட அனுமதிக்கப்படாமல் உடுத்திருந்த உடைகளுடன் இழுத்துச் செல்லப்பட்டார்கள். கிரிமினல் குற்றவாளிகளைப் போல அந்தப் பெண்களை பொலிஸார் அந்த இரவு வேளையில் தரையில் இழுத்துச் சென்றார்கள். இந்த நாகரீகமான காலத்தில் அநாகரீகமான முறையில் பொலிஸார் செயற்பட்டார்கள்.

அதேபோன்ற ஒரு செயற்பாடு பின்னர் பாண்டிருப்பில் இடம்பெற்றது. அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் அமைப்பின் தலைவி செல்வராணி தமது குழுவினருடன் இணைந்து கஞ்சியைக் காய்ச்சி வழங்குவதற்காக முன்வந்த போது அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸார் அந்த இடத்துக்கு வந்து, அங்கு கஞ்சி காய்ச்ச முடியாது எனவும், மீறிச் செயற்பட்டால் கைது செய்யப்படுவீர்கள் என்றும் எச்சரித்துச் சென்றிருந்தார்கள். அதனையடுத்து கஞ்சி காய்ச்சுவது நிறுத்தப்பட்டது.

அதேபோல, மட்டக்களப்பில் புதுார் என்ற இடத்திலும் கஞ்சி காய்சி வழங்கிக்கொண்டிருந்த போது அங்கு வந்த பொலிஸார் அதனைத் தடுத்து நிறுத்தும் முகமாகச் செயற்பட்டிருந்தார்கள். இருந்த போதிலும் அந்த அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் அந்த நிகழ்வு நடைபெற்றது. இதனைவிட மற்றொரு இடத்தில் கஞ்சி காய்ச்சுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்ற போது, பொலிஸார் அதற்கு எதிரான எச்சரிக்கையை விடுத்திருந்தார்கள்.

போரின் இறுதி நாட்களில் முள்ளிவாய்க்காவில் கொடூரமாகக் கொல்லப்பட்டவர்களை நினைவுகூர்வதற்கான உரிமை கூட இந்த நாட்டில் இல்லை என்பதைத்தான் இந்த நிகழ்வுகள் உணர்த்திக்கொண்டிருக்கின்றன. சர்வதேசமன்னிப்புச் சபையின் பொதுச் செயலாளரும் இந்த நாட்களில் இங்குவரவிருக்கின்றார். அவர்வருகின்ற நிலையில் கூட இவ்வாறான அக்கிரமமான செற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதனால்தான் நாம் மீண்டும் மீண்டும் தெரிவித்துக்கொள்வது, இந்த நாட்டில் இடம்பெற்ற இனப்படுகொலைகள் குறித்து விசாரணைகளை நடத்துவதற்கு உள்ளகப் பொறிமுறைகளில் எமக்கு நம்பிக்கையில்லை. சர்வதேசப் பொறிமுறை மூலமாகவே இங்கு நடைபெற்ற படுகொலைகளுக்கான பரிகார நீதி வழங்கப்பட வேண்டும் என்பதையும் நாங்கள் மீண்டும் மீண்டும் அழுத்தமாகத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**பாதுகாப்புத் தரப்பினரது இந்த அச்சுறுத்தல் மற்றும் கெடுபிடிகள் காரணமாக இந்த நினைவேந்தலை அனுஷ்டிப்பதில் மக்கள் மத்தியில் ஒரு அச்ச நிலை கிழக்கு மாகாணத்தில் காணப்படுகின்றதா?**

பொலிஸாரைப் பொறுத்தவரையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை மக்கள் தமது விருப்பப்படி அனுஷ்டிப்பதற்கு அனுமதிப்பதில்லை என்ற நிலையில்தான் இவ்வாறு அச்சத்தை ஏற்படுத்துவதற்கு அவர்கள் முயன்று கொண்டிருக்கின்றார்கள். ஆனால், இதனை நடத்த வேண்டும் என செயற்படும் சிவில் சமூகத்தினர் அதற்கான ஆர்வத்துடன்தான் இருக்கின்றார்கள். அவர்களுடைய ஆர்வம் குறையவில்லை.

ஆனால், சாதாரண மக்கள் தமது வாழ்வியல் நிகழ்வாக இதனைச் செய்வதற்கான விருப்பம் இருந்தாலும், அவர்களுக்கான சட்டப் பாதுகாப்பும் மற்றும் தொடர்ந்தும் இயங்குவதற்கு ஆபத்துக்கள் உருவாகுமா என்ற அச்சம் அவர்களுக்கு இருக்கின்றது.

**இந்த முள்ளிவாய்கால் நினைவேந்தல் மற்றும் கஞ்சி வழங்குதல் என்பவற்றின் முக்கியத்துவம் என்ன?**

இறுதிப் போர் இடம்பெற்ற காலப் பகுதியில் அங்கு 70 ஆயிரம் முதல் 75 ஆயிரம் வரையிலானவர்கள் மட்டும்தான் இருக்கின்றார்கள் என்ற தகவல் அரசாங்கத் தரப்பினரால் தெரிவிக்கப்பட்டிருந்தது. அந்தத் தகவல் காரணமாக இந்தளவு மக்களுக்குத் தேவையானளவு உணவுப் பொருட்கள் மட்டும்தான் அந்தப் பகுதி மக்களுக்கு அனுப்பப்பட்டது. அதனால், அந்தப் பகுதியில் பெரியளவிலான உணவுத் தட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டிருந்தது. இறுதிப் போர் முடிவுக்கு வந்தபோது, 4 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் அங்கிருந்து வெளியே வந்திருந்தார்கள்.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்



# களத்திலே கருவான மாவீரனின் மகள் எழுதுகிறேன்...



## அப்பா !

*15 ஆம் ஆண்டு நினைவுகளுடன் (15.05.2024)*

*காவியத் தலைவன்*
*ஓவியம் ஒன்று வரைந்தாராம்*
*அதற்கு வர்ணங்கள் தீட்டி*
*சொர்ணம் என்று பெயர் சூட்டினாராம்*
*நீங்கள் பிறந்தீர்களாம்!*
*நீங்கள் சொன்ன கதை!*

படுக்கை நேரக் கதைகளும் தலைவர் மாமாவைப் பற்றியதும் தமிழீழத்தைப் பற்றியதும், மாவீரர்களைப் பற்றியதும் தான். ஓர் இரண்டு முறை உங்கள் மடியில் அமர்ந்து புத்தகக் கதை கள் கேட்டதைத் தவிர.'அப்பாவ நல்லாப் பாருங்கோ இதுதான் கடைசியா இருக்கும் போல ' இந்த வார்த்தைகள் என்னைப் பலமுறை கூறுபோட்டுப் போனதுண்டு. பல முறை அழுகை வரும் ஆனால் அழுததில்லை ஏனென்றால் உங்களுக்குப் பிடிக்காது. ஒவ்வொரு முறையும் அந்த ஒற்றை அணைப்பின் கதகதப்பிற்காய்க் காத்திருந்தோம் உங்களை மீண்டும் காணும் வரை. வாகனச் சத்தம் கேட்டு அப்பா வாறார் எண்டு பலமுறை ஏமாந்ததுண்டு. விரல் விட்டு எண்ணும் நாட்களைத்தான் நாங்கள் உங்களோடு செலவிட்டிருக்கிறோம். எங்களுக்கும் அப்பாவோடு எப்படி எப்படியோ வாழவேண்டும் என்ற ஆசைகள் இருந்தன. அதற்கு நீங்கள் கொடுத்த மருந்து தமிழீழ ஆசை. 'எங்களுக்கு என்று ஒரு நாடு கிடைக்கும் அண்டைக்கு நான் உங்களுக்கு அப்பாவா மட்டும் வருவன்' என்று சொல்லியே சமாதானம் செய்து விடுவீர்கள்.

நீங்கள் ஒரு குழந்தை போலத்தான் எங்களுடன் விளையாடுவீர்கள். இத்தனை ஆண்டுகள் எப்படிக் கடந்தது என்று தெரியவில்லை. நீங்கள் இல்லாமல் நாங்கள் பெற்ற துன்பங்கள் ஏராளம். ஆனால் ஈழத்திலே அப்பாக்களைப் பிரிந்த எல்லாப் பிள்ளைகளும் இதைத்தான் அனுபவிப்பார்கள் என்று சொல்லி அம்மா எங்களைச் சாதாரணமாகக் கடக்க வைப்பார். இருப்பினும் நீங்கள் வாழ்ந்த காலத்தில் கூட ஒரு சாதாரண அப்பா பிள்ளைகளுக்கான, உறவைப் பரிமாறிக் கொள்ள நீங்கள் எங்களுக்கு அவகாசம் தந்ததே இல்லையே! உங்களின் கடமையை நாங்கள் அறிவோம்!

ஆனால் குழந்தைகளாய் நாங்கள் பெற்ற ஏக்கத்தை எங்கே தேடுவது ?

உடைந்து போன உங்கள் கால்களுக்கு மருந்து கட்ட மாமாக்கள் வந்த வேளை, நாங்கள் எழும்பி வெளியில் செல்ல முற்பட்டோம். 'இருக் கட்டும் அவையள் பாத்து உறுதிபெறட்டும் ' என்று சொல்லி எங்களைப் பாக்க வைச்சனிங்கள். நாங்கள் எல்லாவற்றிற்கும் தயாராக இருக்க வேண்டும் என்பதில் உறுதிபூண்ட மனிதன் நீங்கள்.

அப்பாவாக உங்களை அருகிருந்து உணர்ந்ததைக் காட்டிலும் தலைவர் மாமாவையும் தாய் மண்ணையும் நேசிக்கிற போராளியாகத்தான் அதிகமாகக் கண்டிருக்கிறோம். அதனால்தான் அக்காவும் உங்களோடு மாவீரராய் துயில் கொள்கிறாள். நீங்கள் புகட்டி வளர்த்த பாடங்களை நாங்கள் மறக்கவில்லை. அண்ணன் அண்ணன் என்று உச்சரித்தமனிதன், எக்கணமும் தமிழீழத்தை சுவாசித்த மூச்சுக் காற்று, உங்களின் பிள்ளைகள் என்பதில் பெருமிதம் கொள்கிறோம். இழப்பில் பெருமைப்படுகிற இன்னல்களை யார் அறிவார்? அப்பா என்று உங்களை அழைத்துவிடவும் அக்கா என்று எம் உயிரானவளை ஒரு முறை அணைத்து விடவும் ஆசையாகத் தான் இருக்கிறது. வரிகளில் அடக்க முடியாத மாவீரம் எங்கள் இரத்தத்தில் பாதியென்று சொல்லுகிற நிலையில் கூட நாங்கள் இல்லை. உங்களின் கடைசி முத்தத்தின் ஈரம் காயவில்லை. அக்காவின் கடைசிப் பார்வை கண் விட்டு அகலவில்லை!

*இன்று பட்டுப் போகிற வாழ்க்கையும்*
*தொட்டுப் போகிற உங்கள் நினைவுகளும்*
*ஏன் எம் மண்ணை விட்டுச் சென்றீர்கள் என்று எம்மிடம் கேள்வி கேட்கிறது......*

மாமாக்கள் போட்ட பிச்சை அப்பாவின் உயிர் என்பீர்கள். களத்தில் வீழ்ந்த தம்பிகளை நீங்கள் எடுத்துக்காட்டாக்கி எமை வளர்த்தீர்கள். தேவிபுரச் சமரில் இருகால்களும் உடைந்து நீங்கள் குப்பி ஏந்திய போது அதைப் பறித்த வேந்தன் அண்ணாவை நாங்கள் மறக்கவில்லை. அந்தச் சமரில் தன் தளபதியை எப்படியேனும் காப்பாற்றி விட வேண்டும் என்று உங்களை மாரிலும் தோழிலும் தூக்கி வந்த மைந்தன் மாமா. நாங்கள் இருக்கும் வரை அண்ணைக்கு ஒண்டும் நடக்காது என்று சொன்ன உங்கள் உற்ற தம்பி. உங்களோடே கண்களை மூடிப் போனார். கடைசியில் அழைத் தீர்களாம் மைந்தன் என்று. 13 ஆண்டுகள் உங்களோடு பயணித்த மைந்தன் மாமாவையும் நாங்கள் இழந்து நின்றோம் அன்று (15.05.2009). என் தந்தையைக் காப்பாற்ற களங்களில் உயிர் நீர்த்த அத்தனை மாவீரர்களையும் கண்ணீரோடு வணங்குகிறேன். அவர்களின் குடும்பங்களை நன்றி யுணர்வோடு கைகள் பற்றுகிறேன். மாவீரர்களின் உறுமல்கள் ஓனாய்களின் ஊளையை விரட்டி அடிக்கட்டும்.

**வீரவணக்கம் மாவீரவணக்கம்**

**வல்லமை தாருங்கள் அப்பா............**

**மாட்டேன் என்று சொல்ல மானம் இருக்கிறது மறப்பேன் என்று சொல்ல மனசு இல்லையே என் ஈழத்தாயே!!**

**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**

**அ.வி.முகிலினி**

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் — கிழக்கில் கற்றுக்கொண்ட பாடங்கள்

கிழக்கில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் செய்வதை இருப்புக்கரம் கொண்டு அடக்கும் நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துவருகின்றனர். வடக்கில் எழுச்சியுடன் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றுவரும் நிலையில் கிழக்கில் அவற்றினை தடுக்கும் செயற்பாடுகளை பல வழிகளிலும் இலங்கை பொலிஸார் முன்னெடுத்துவருகின்றனர்.



வடகிழக்கு தமிழர்களின் தாயகம்.தமது தாயகத்தில் தாங்கள் சகல உரிமையுடனும் சுதந்திரமாக வாழவேண்டும் என்பதற்காக இன்னுமொரு இனத்தவரிடம் எங்களது உரிமைகளை சண்டையிட்டுத்தான் பெறவேண்டும் என்ற நிலைமையினால் இந்த நாட்டில் படுகொலை செய்யப்பட்ட இலட்சக்கணக்கான தமிழர்களை நினைவுகூரும் நிகழ்வினை கூட செய்யமுடியாத உரிமையினை நிலையில் இன்று தமிழர்கள் இந்த நாட்டில் உள்ளனர்.

இலங்கை பொலிஸார் உறவுகளை நினைவேந்தும் நிகழ்வினை கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக அச்சுறுத்தும் வகையிலேயே முன்னெடுத்துவருகின்றனர்.வடகிழக்கு தாயகத்தில் உணர்வுடன் இந்த நிகழ்வு முன்னெடுக்கும்போது கிழக்கில் மட்டும் இவ்வாறான அடக்குமுறைகளை முன்னெடுப்பது குறித்து பல்வேறு கேள்வியெழுகின்றது.

தற்போது தேர்தல் காலம் என்ற காரணத்தினால் கிழக்கில் முன்னெடுக்கப்படும் எழுச்சி நிகழ்வுகளை தடுப்பதற்கு அல்லது தமிழர்கள் மத்தியில் புலிகள் உள்ளார்கள் என்பதைபோன்ற தோற்றப்பாட்டினை தெற்கில் உருவாக்கி சிங்கள மக்களின் வாக்குகளைப் பெறலாம் என்ற நோக்குடனும் இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றதா என்ற சந்தேகம் காணப்படுகின்றது.



முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறும் நிகழ்வுகள் ஏன் கிழக்கில் முன்னெடுக்கப்படுகின்றன என்பதுபோன்ற பிரசாரங்களும் கிழக்கில் பிரதேசவாதத்தினை மூலதனமாக கொண்டு செயற்படுவோரால் தொடர்ச்சியாக மக்கள் மத்தியில் விதைக்கப்படுகின்றது.வடக்கில் கொல்லப்பட்டவர்களை கிழக்கில் ஏன் நினைவுகூரப்பட வேண்டும். கிழக்கில் நடைபெற்ற படுகொலைகள் வடக்கில் ஏன் நினைவுகூரப்படுவதில்லை என்ற வகையில் இந்த பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் என்பது ஒட்டுமொத்த படுகொலைகளையும் நினைவுகூரும் வாரம் என்பதை அனைவரும் நினைவில்கொள்ளவேண்டியது மிக முக்கியமாகும்.வடகிழக்கில் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை உலகறியச்செய்யும் ஒரு தினமாகவே முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு அனுஸ்டிக்கப்படுகின்றது .அதன்காரணமாகவே கிழக்கில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் தமிழர்கள் படுகொலைசெய்யப்பட்ட இடங்களில் நடாத்தப்படுகின்றது.

வடகிழக்கு தமிழர் தாயகம் என்பது பிரிக்கமுடியாதஒன்று.அதில்பிரதேசவேறுபாடுகள் வெறுமனே இலங்கையின் பேரினவாத அரசுகளினால் திட்டமிடப்பட்டு தமிழர்கள் மத்தி யில் புதைக்கப்படும் ஒரு விடயமாகவே பார்க்கப்படுகின்றது.இந்த பிரதேசவாத சிந்தனையே இன்று கிழக்கில் தமிழர்களின் இருப்பினை கேள்விக்குள்ளாக்கிவருகின்றது.இவற்றினை இல்லாமல்செய்து கிழக்கில் தமிழ் தேசிய சிந்தனையினை கட்டியெழுப்பி இந்த நாட்டில் தமிழ் தேசிய இனத்திற்கு நடந்த அநீதிகளை தொடர்ச்சியாக வெளிப்படுத்தவேண்டிய தார்மீக பொறுப்பு ஒவ்வொரு தமிழருக்கும் இருக்கின்றது.



உண்மையில் தமிழர்கள் தங்களது உறவுகளை நினைவுகூரும் நிகழ்வினை கூட இந்த நாட்டில் நடாத்தமுடியாது என்றால் இந்த நாட்டில் தமிழர்கள் எந்த நிலையில் உள்ளார்கள் என்பது சர்வதேச நாடுகள் உட்பட அனைவரும் விளங்கிகொள்ள வேண்டிய முக்கியத்துவமானதாகயிருக்கின்றது.

ஒவ்வொருவருக்கும் தமது உறவுகளை நினைவுகூரும் உரிமையிருப்பதாக இலங்கை சட்டம் சொல்லுகின்றபோதும் அந்த சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் இலங்கையின் நீதித்துறையும் இலங்கையின் சட்ட அமுலாக்கல் துறையும் தமிழர்களுக்கு மட்டும் அந்த உரிமையில்லையென்று கூறுகின்றது என்றால் தமிழர்கள் இந்த நாட்டு பிரஜைகள் அல்ல அவர்கள் வேறு நாட்டு பிரஜைகள் என்பதை சொல்லாமல்சொல்கின்றதா?.

இலங்கை சட்டத்துறையிலோ இலங்கையின் பாதுகாப்புதுறையிலோ தமிழர்கள் என்றும் நம்பிக்கைகொண்டவர்கள் அல்ல.அதன்காரணமாக வடகிழக்கு மாகாணத்திற்கான தனியான அதிகாரங்களை தமிழர்கள் கோரிவருகின்றனர்.

இத்தனை யுத்தம் நடைபெற்று இத்தனை அழிவு நடைபெற்று 146,000 மக்கள் காணாமல் ஆக்கப்பட்டும் கூட இன்னமும் இலங்கை போலீசார் திருந்தவில்லை. இதனால் தான் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு போலீஸ் அதிகாரம் வேண்டும் என்று எத்தனை முறை கேட்டிருந்தோம் ஏனென்றால் இங்கு இருக்கிறவர்கள் மக்களின் உணர்வுகளை விளங்கிக் கொள்ள முடியாதவர்களாக இருக்கின்றார்கள் என

மட்டு.நகரான்



அண்மையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டிருந்த மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் கூறியிருந்தார். பொலீஸ் அதிகாரம் காணி அதிகாரம், சுயநிர்ணய உரிமை,சுயாட்சி வடகிழக்கு இணைப்பு என்றெல்லாம் நாங்கள் கோருவதற்கு காரணம் அடக்குமுறையில் இருந்து விடுபட்டு நாங்கள் சுதந்திரமாக வாழ்வதற்காகத்தான் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

நாட்டின் ஒரு பகுதியில் மட்டும் ஒரு இனத்தை அடக்குவதற்கு முன்னெடுக்கும் செயற்பாடுகளை இனவன்முறையாகவே கொள்ள வேண்டியதாகும்.கிழக்கில் தமிழர்கள் மீது முன்னெடுக்கப்படும் செயற்பாடு என்பது தமிழர்களின் குரல்வளையினை நசுக்கி அவர்களிடமிருந்து குரல்கள் வெளிவராத வகையிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப் படுகின்றது.

கிழக்கின் இன்றைய நிலைமைகளுக்கு இங்கு காணப்படும் தமிழ் தேசியம் சார்ந்து செயற்படும்சிவில்செயற்பாட்டாளர்களும்முக்கிய காரணமாக அமைவதும் மிகவும் கவலைக்குரிய விடயமாகவே உள்ளது.புலம் பெயர்ந்துள்ள அமைப்புகள் பல பிரிந்துநின்று செயற்படும் நிலையில் அவர்கள் கிழக்கில் தங்களது பிரதிநிதிகள் ஊடாக இங்கும் பிரிவினையை ஏற்படும் நிலைமையினை காணமுடிகின்றது. இதன் காரணமாக ஒருவரின் நிகழ்வினை தடுப்பதற்கு இன்னுமொருவர் அரச புலனாய்வுத்துறையினையும் பொலிஸாரையும் அணுகும் நிலைமையும் காணப்படுகின்றது. இவ்வாறா துர்ப்பாக்கிய நிலைமையினையும் பாதுகாப்புத்துறையினர் தங்களுக்கு சார்பாக பயன்படுத்தும் நிலைமையும் காணப்படுகின்றது.



கிழக்கினைப்பொறுத்த வரையில் நாங்கள் தொடர்ச்சியாக வலியுறுத்திவரும் விடயம் ஒன்றிணைந்த செயற்பாடு ஆகும். தமிழ் தேசிய கட்சியானாலும் தமிழ் தேசிய பரப்பில் செயற்படும் சிவில்சமூக செயற்பாட்டாளர்களானாலும் ஒன்றிணைந்த செயற்பாடுகள் மூலமே அனைத்து பிரச்சினைகளையும் எதிர்கொள்ளமுடியும். இன்று

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# ஈழம் - காசா மனிதாபிமானத்திற்கும் பாரபட்சம் உண்டு

ஈழம் - பாலஸ்தீனம் இரண்டுக்குமே பெரியளவில் வித்தியாசமிருப்பதில்லை. ஈழ நிலத்தில் பௌத்த சிங்கள பேரினவாத அரசு உலகத்தின் ஆதரவோடு தமிழ் மக்களை இனப்படுகொலை செய்தது. பாலஸ்தீன நிலத்தில் யூதப் பெரும்பான்மைவாத இஸ்ரேலிய அரசு உலகத்தின் ஆதரவோடு பாலஸ்தீனியர்களைப் படுகொலை செய்துவருகின்றது. இரண்டு நிலத்தின் இனப்படுகொலைகளுக்கும் ஆதரவாக அமெரிக்கா நிற்கிறது என்பது பொதுவிதி. இந்த ஆதரவினைப் பயன்படுத்திக்கொண்ட இரு அரசுகளுமே தன் படைகளைக் கொண்டு கண்மூடித்தனமான - மானுட குலமே வெட்கித் தலைகுனியுமளவிற்கான கொடூரங்களை நிகழ்த்தின. நிகழ்த்திக்கொண்டிருக்கின்றன.



ஈழம், பாலஸ்தீனம் ஆகிய தனித் தேசம் கோரிப் போராடுகின்ற இரு தேசங்களிலும் இடம்பெறும் இனப்படுகொலை ஒரேதன்மையானதாகினும், இரு தேசங்களையும் சில நாடுகள் கையாளும் விதம் வித்தியாசமானது. மனிதவுரிமைகளைக் காப்பாற்றுகின்றதாகச் சொல்லிக்கொள்கின்ற சர்வதேச நிறுவனங்கள்கூட இந்த விடயத்தில் இரட்டைவேடமே போடுகின்றன. 2009 ஆம் ஆண்டு ஈழத்தில் இடம்பெற்ற இனப்படுகொலையைத் தடுத்து நிறுத்தத் தவறியமை குறித்து, வருத்தமளிக்கிறது என்கிற வார்த்தையோடு மட்டும் கடந்துவிட்ட ஐ.நா உள்ளிட்ட சர்வதே அமைப்புகள் பாலஸ்தீன விடயத்தில் பாலஸ்தீனத்தைத் தனியே பிரித்து விடக்கூடியளவிற்கு “அலுவல்” பார்க்கின்றன.

ஈழத்தில், இறுதிப்போரில் மாத்திரம் (மூன்று மாதங்களுக்குள்) 146,679 தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர் எனச் சொல்லப்படுகின்றது. இந்தப் படுகொலைகளுக்குத் தன் படைகளை வழிநடத்திய, கட்டளைகளை வழங்கியவர்கள் இலங்கைத் தீவிற்குள்ளேயும், வெளியேயும் அதியுயர் பதவிகளை வகிக்கின்றனர். அத்தரப்பினரை இலங்கையின் ஜனாதிபதியாக்கி வேடிக்கை பார்த்தது உலகம். இந்த மனிதகுல விரோதிகளுக்கு எதிராக சர்வதேச ஊடகங்களும், உள்ளூர் ஊடகங்களும் ஆதாரங்களை வெளிப்படுத்திய போதும் சர்வதேச அமைப்புகள் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. ஆனால் பாலஸ்தீன இனப்படுகொலைக்குக் கட்டளைகளை வழங்கிக்கொண்டிருக்கும் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவைக் கைதுசெய்ய பிடியாணை பிறப்பிக்குமளவுக்கு சர்வதேச நீதிசார் அமைப்புக்கள் “இறங்கி வேலைசெய்கின்றன”.

கடந்த 06 மாதங்களுக்குள் மாத்திரம் காஸா மீது இஸ்ரேலிய படையினர் நடத்திய தாக்குதல்களில் 26,000 இற்கு மேற்பட்ட பாலஸ்தீனிய சிறார்கள் கொலைசெய்யப்பட்டும், காயமடைந்துமிருப்பதாகவும் சிறுவர் பாதுகாப்பு நிதியம் அறிக்கையிட்டுள்ளது. 1948 ஆம் ஆண்டிலிருந்து இலங்கைத் தீவில் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட இனப்படுகொலை நடவடிக்கையின்போது கொல்லப்பட்ட, காயமடைந்த எத்தனை சிறார்கள் பற்றிய தகவல்கள் இந்த அமைப்பிடம் உண்டு? இலங்கையில் சிறார்கள் இராணுவம் நடத்திய எறிகணை வீச்சுக்களில் கொல்லப்பட்டனர். விமானத் தாக்குதலில் கொல்லப்பட்டனர். அரசு விதித்த மருந்துத் தடைகளால் கொல்லப்பட்டனர். இராணுவத் தின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் கொல்லப்பட்டனர். இறுதியில் இராணுவத்திடம் சரணடைந்த



துரைராஜா ஜெயராஜா

சிறார்கள் பலருக்கு என்ன ஆனதென்றே தெரியாத நிலை இற்றைவரை நீடிக்கிறது. உலகளவில் சிறுவர்களுக்கு எதிரான அநீதிகளுக்கு எதிராகப் பணியாற்றும் நிறுவனங்களிடம் ஏதாவது தகவல்கள் உள்ளனவா?



அண்மையில் சர்வதேச ஊடகங்களில் ஒரு ஒளிப்படம் பிரபலமாகியிருந்தது. அதாவது பட்டினிச் சாவினை எதிர்நோக்கும் பாலஸ்தீன சிறார்களைக் காப்பாற்றுவதற்காக இஸ்ரேல் உள்ளிட்ட நாடுகள், தொண்டு நிறுவனங்கள் பரசூட் மூலமாக உணவுப் பொதிகளை காசா மீது வீசியதைக் காட்டும் ஒளிப்படமே அது. பாதி உணவு நிலம் முழுவதும் சிந்திச் சிதறிக் கிடக்க அவற்றைக்கூட சிறார்கள் தம் கைகளால் பொறுக்கி எடுத்து உண்டதையும் படம் பிடித்திருந்தார்கள். இதே நிலைமைகள் 2009 ஆம் ஆண்டில் முள்ளிவாய்க்காலிலும் ஏற்பட்டன. பல சிறார்கள் உணவின்றி இறந்துபோனார்கள். உமியைப் பிடைத்து அதிலிருந்து கிடைக்கும் குருனல் அரிசியைக்கொண்டு உப்பில்லா கஞ்சி காய்ச்சி சிறார்களின் பசியாற்றிய சம்பவங்கள் நடந்துகொண்டிருந்தன. இந்த வேளைகளிலெல்லாம் சர்வதேச மனிதாபிமானம் ஈழத்தின் மீது எட்டியும் பார்க்கவில்லை. எதைச் செய்தாவது புலிகளை அழித்துவிடு என இலங்கை அரசுக்கு உத்தரவு வழங்கிவிட்டு சர்வதேச நாடுகளும், சர்வதேச அமைப்புக்களும் அமைதிகாத்தன.

பாலஸ்தீன விடயத்தில் இலங்கை அரசு காட்டிவரும் அக்கறையும் மிகுந்த ஆச்சரியமானது. இலங்கை தீவில் தமிழர்களின் சுயநிர்ணயக் கோரிக்கைக்கான போராட்டத்தைப் பயங்கரவாதம் எனப் பச்சைகுத்தி அழித்த மகிந்த ராஜபக்ச, பாலஸ்தீனம் விடுதலை பெறவேண்டும் என அரும்பாடுபட்டார். உலகம் முழுவதும் கடன்வாங்கி நாட்டுக்கு சேவை செய்துகொண்டிருக்கும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பாலஸ்தீனத்துக்கு உதவியாகப் பெருந்தொகை நிதியை நன்கொடையாக அளித்துள்ளார். அதேபோல இலங்கையில் இப்போதும் ஒட்டுமொத்த தமிழர்களையும் பயங்கரவாதிகளாகக் கருதும் சிங்கள மக்கள் தன்னெழுச்சியாகப் பாலஸ்தீனியர்கள் விடுதலை பெறவேண்டும் என வேண்டிக்கொள்கின்றனர். இனப்படுகொலையில் ஈடுபடும் இஸ்ரேலியர்களுக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். நிதிசேகரித்து உதவுகின்றனர். தம் சொந்த நாட்டில் வாழும் இனத்தைத் தாமே இனப்படுகொலை செய்துகொண்டு, பிற நாடொன்றில் இனப்படுகொலைக்குள்ளாகும் இனத்துக்கு உதவுதும், அவர்களுக்கு ஆதரவாகச் செயற்படுவதும் எவ்வாறான மனநிலை என்பதை விளங்கிக்கொள்ள முடியிவில்லை.



ஈழத்தமிழர்களைப் போலவேதான் பாலஸ்தீனியர்களுக்கு எதிரான இனப்படுகொலையும் நீண்டதொரு வரலாற்றைக்கொண்டது. ஈழத்தமிழர்களுக்கு முடிவிடமான முள்ளிவாய்க்கால் போல பாலஸ்தீனியர்களின் முடிவிடமாக காசா மாறியிருக்கிறது. இந்நிலையில் காசாவில் இடம்பெறும் மனிதவுரிமை மீறல்களையும், இனப்படுகொலையையும் கண்டித்து அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளிலும் வெகுசனப் போராட்டங்கள் இடம்பெற்றுவருகின்றது. ஆனால் 2009 ஆம் ஆண்டில் ஈழத்தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை நிகழ்த்தப்பட்டபோது இந்த வெகுசனத் திரட்சியைக் காட்டமுடியாமல் போனதை ஏன்? இன்று சமூக ஊடகங்கள் பெருகிவிட்டாலும், பேஸ்புக் போன்ற ஊடகங்கள் அப்போதும் இருந்தன. ஆனால் ஈழத்தமிழரின்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# உள்ளத்தை ஆற்றுப்படுத்தவே முள்ளிவாய்க்கால் நிகழ்வு

திருமலையான்

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை தடுத்தும் மக்களின் உரிமைகளை மறுதளிப்புச் செய்கின்றனர். வடகிழக்கு மக்கள் மே மாதத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் ஈடுபட்டு வந்த போதும் திருகோணமலை மாவட்டம் சம்பூர் பகுதியில் அராஜகமாக பொலிஸாரால் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் உட்பட நால் வர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் ICCPR சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர்.



முள்ளிவாய்க்காலில்படுகொலை செய்யப்பட்டோர்களை நினைவு கூறுவது பிழையா? யுத்த காலத்தில் உயிர் நீத்த உறவுகளுக்காக நினைவு தூபி என அமைத்து பல நினைவேந்தல்கள் இடம் பெற்று வருகின்றன.

தெற்கில் பாற்சோறு கொண்டாட்டங்கள் மூலமாக பல நிகழ்வுகள் நடந்தேறுகின்ற போது வடகிழக்கு மக்கள் தங்களது உள ஆற்றுப் படுத்தலுக்காக நினைவேந்தல்களை செய்ய முடியாது தடுத்து நிறுத்துகின்றனர்.

இது தொடர்பில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வ ராசா கஜேந்திரன் கருத்து தெரிவிக்கையில் சர்வ தேச குற்றவியல் விசாரணை வேண்டும் நல்லிணக்க ஆணைக்குழுவை உருவாக்கி அரசாங்கம் சர்வ தேசத்தை ஏமாற்றியுள்ளது

மூதூரில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் போது கைது செய்யப்பட்டவர்களின் நிலை தொடர்பில் சட்டத்தரணி க. சுகாஷ் செய்த சமர்ப் பணத்தின்பின்ஊடகங்களுக்குகருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் தெரிவித்த அவர் இந்த மாதம் தமிழர்களுக்கு வலி சுமந்த மாதமாகும் தமிழர்களை 15 வருட காலமாக ஏமாற்றி வரும் இந்த அரசு முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை தொடர்பாக அவர்களை நினைவுகூர விடாமல் தடுத்துள்ளது இந்த நிலையில் மூதூரில் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பில் ஐசிசிபி ஆர் தொடர்பான அறிக்கையை பொலிஸாரிடம் நீதிமன்றம் கோரியுள்ளது இது தொடர்பில் சமர்ப்பணங்களை முன்வைத்து நீதிமன்றில் வாதாடிய சிரேஷ்ட சட்டத்தரணி சுகாஷ் மற்றும் முஸ்லிம் சட்டத்தரணிகளுக்கு இந்த நேரத்தில் நன்றிகளை தெரிவிக்கிறேன் பொய்யான குற்றச் சாட்டை பொலிஸார் முன்வைத்து நீதிமன்றில் தடை உத்தரவை பெற்று நீதிமன்றை ஏமாற்றியுள்ளனர்.



தற்போது நீதிமன்றம் தடையை நீக்கியுள் ளது.முள்ளிவாய்க்கால் படுகொலையின் போது அவர்கள் உணவை ஆயுதமாக பயன்படுத்தி கஞ்சியை பச்சிளம் குழந்தைகளுக்கும் கொடுத்துள் ளனர் இது போன்ற உள ஆற்றுப்படுத்தலுக்காக இதனை நினைவு கூறுகின்றனர் தமிழர்கள் இந்த மாதத்தில் களியாட்டங்களை தவிர்த்து உணர்வு பூர்வமாக நினைவேந்தலில் ஈடுபடுகின்ற வலி சுமந்த மாதமாக காணப்படுகிறது.

உள்ளக பொறி முறை மூலம் நல்லிணக் கத்தை ஏற்படுத்த முடியாது ஒற்றையாட்சி முறையை நீக்கி சமஷ்டியை கொண்டு வரவேண் டும் என்பதுடன் தமிழ் தேச மக்கள் எதிர்வருகின்ற ஜனாதிபதி தேர்தலை புறக்கணிக்க வேண்டும் என்றார்.

இது தவிர சம்பூர் பகுதியில் கைதாகிய நால்வர் தொடர்பில் பலரும் பல கண்டனங்களை வெளியிட்டுள்ளனர்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தலைமையில் (16.05.2024) அன்று மாலை முள்ளி வாய்க்கால் கஞ்சி வழங்கி வைக்கப்பட்டது. கடந்த வாரம் மூதூர் பொலிஸாரால் சம்பூரில் கஞ்சி வழங்கப்பட்ட போது ஐசிசிபி ஆர் குற்றச் சாட்டில் நால்வர் கைது செய்யப்பட்டனர். இது தொடர்பில் இது தொடர்பில் தடையை அகற்றக் கோரிய சமர்ப்பணத்தை சிரேஷ்ட சட்டத்தரணி க.சுகாஷ் மன்றில் வாதிட்டார் இதனை தொடர்ந்து மன்றினால் தடை உத்தரவு அகற்றப்பட்டுள்ளதை அடுத்து முள்ளி வாய்க்கால் கஞ்சிகளை வழங்கி வைத்தனர்.திருகோணமலை சிவன் கோயிலடிக்கு முன்னால் உள்ள வீதியில் உள்ள பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டு கஞ்சிகளை அருந்தினர். இதில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மாவட்ட அமைப்பாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



இவ்வாறு நான்கு சந்தேக நபர்களும் தலா ஒரு இலட்சம் ரூபாய் சரீரப் பிணையில் வியாழக்கிழமை(2024.05.17) வெள்ளிக்கிழமை மூதூர் நீதிவான் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட னர்.

மூதூர் நீதிவான் நீதிமன்ற நீதிபதி தஸ்னீம் பௌஸான் இவ்வாறு பிணை வழங்கியிருந்தார்.

புதன்கிழமை(2024.05.16) மூதூர் நீதிமன்றத் தில் செய்யப்பட்ட நகர்த்தல் பத்திரத்தின் பிரகாரம் அதனை உற்று நோக்கிய சம்பூர் பொலிஸார் ICCPR சட்டத்தை கைவாங்கியதன் மூலம் பிணை வழங்கும் அதிகாரம் நீதிமன்றத்திற்கு இருப்பதன் காரணத்தினாலும், ஆஜராகிய சட்டத்தரணிகளின் விண்ணப்பத்திலும் திருப்தி அடைந்த நீதிமன்ற மானது குறித்த நான்கு சந்தேக நபர்களையும் பிணையில் விடுவித்தது.

சம்பூர் பொலிஸ் பிரிவிலுள்ள சேனையூர் பகுதியில் நான்கு சந்தேக நபர்களும் 12 ஆம் திகதி கைது செய்யப்பட்டு 13 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்ட நிலையில் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் நகர்த்தல் பத்திரம் மூலம் இவர்கள் இன்று பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இன்றைய பிணை வழங்கல் தொடர்பான நகர்த்தல் பத்திர விசாரணையில் 8 சட்டத்தரணிகள் நீதிமன்றில் ஆஜராகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்படியாக மக்களுக்கான உரிமைகளை கூட செய்ய விடாது இந்த நாட்டில் சிறுபான்மை மக்கள் தடுக்கப்படுகின்றனர். பெரும்பான்மைக்கு ஒரு சட்டம் சிறுபான்மைக்கு ஒரு சட்டம் என்ற நிலை எழுந்துள்ளது. இந்த நாட்டில் நீதி நிலைநாட்டப்பட்டு அனைத்து சமூகமும் சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் வாழ வழி சமைத்துக்கொடுக்கவேண்டும்இல்லாது போனால் மக்களின் துயர் துன்பங்களுடன் வடகிழக்கில் உள்ள சிறுபான்மை சமூகம் பாதிக்கப்படக் கூடும்.

அனைவரும் ஒற்றுமையாகவும் நல்லி ணக்கத்தை ஏற்படுத்தவும் என்ற நிலைப்பாடு இருந்தால் அரசாங்கம் மக்களுடைய உணர்வுகளை உணர்வுபூர்வமாக வெளிப்படையாக மதிக்க வழியமைக்க வேண்டும்.

• • •

**ஈழம்-காசா ... தொடர்ச்சி ...**

இனப்படுகொலைப் படங்களைப் பதிவேற்றக்கூட இந்த ஊடகங்களில் அனுமதிக்கப்படுவதில்லை. ஏன் இந்த பாராபட்சம்?

உண்மையில் ஈழத்தமிழர்களுக்கு எதிரான இலங்கை அரசின் இனப்படுகொலைக்கும், பாலஸ் தீன மக்களுக்கு எதிரான இஸ்ரேலிய அரசு மேற்கொள்ளும் இனப்படுகொலைக்கும் பெரிய ளவு வித்தியாசங்கள் இல்லை. இனப்படு கொலை விடயத்தில் இலங்கை, இஸ்ரேல் ஆகிய இரு அரசுகளுமே ஒரே வழித்தடத்திலேயே பயணிக்கின்றன. கட்டமைக்கப்பட்ட இனப்படு கொலையை எப்படி நிகழ்த்துவது? தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டத்தை எப் படி பயங்கரவாதமாக சித்தரிப்பது உள்ளிட்ட விடயங்களில் தம் அறிவைத் தமக்கிடை யில் பகிர்ந்துகொள்கின்றன. இலங்கை அரசு அம்பாறை யில் ஆரம்பித்த இனப்படுகொலையின் ஒரு கூறாகிய தமிழர்களின் நிலங்களை அபகரித்து சிங்களவர்களைக் குடியேற்றும் வேலைத்திட்டத் தைத்தான் பாலஸ்தீனம் முழுவதும் இஸ்ரேல் மேற்கொண்டு வருகின்றது. தமிழர்களின் எல்லா இடங்களையும் அபகரித்துக்கொண்டு, எப்படி முள்ளிவாக்காலில் பாரிய இனப்படுகொலையை இலங்கை அரசு தமிழர்கள் மீது நடத்தியதோ, அதே போன்றதொரு நிகழ்ச்சிநிரலைத்தான் இன்று காசாவில் இஸ்ரேல் செய்துகொண்டிருக்கின்றது. எனவே இனப்படுகொலை விடயத்தில் இலங்கை, இஸ்ரேல் ஆகிய இரண்டு பலம்பொருந்திய -சர்வதேச ஆசிபெற்ற நாடுகளும் ஒரே தராசில் வைத்துப் பார்க்கப்படவேண்டியவை. அதே போல இந்த இரண்டு அரசுகளாலும் இனப்படு கொலைக்குள்ளாகிக் கொண்டிருக்கும் ஈழத்தமிழர் கள், பாலஸ்தீனர்கள் ஆகிய இரண்டு தேசிய இனங்களும் விரைவாக இனப் படுகொலைக் குள்ளாகும் இனங்களின் தராசில் சம அளவில் வைக்கப்படவேண்டியவை. சம நீதி வழங்கப்பட வேண்டியவை.

• • •

# சிதைக்கப்படும் இருப்பு

துரைசாமி நடராஜா

பெருந்தோட்ட மக்கள் காணியுரிமை மற்றும் வீட்டுரிமை இல்லாத சமூகமாக இருந்துவரும் நிலையில் அம்மக்களின் இது தொடர்பான கனவு மெய்ப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுப்பெற்று வருகின்றன. இதனிடையே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இவ்விடயத்தில் கவனம் செலுத்தியுள்ள நிலையில் இம்மாதத்தில் பெருந்தோட்ட மக்களுக்கான காணி உறுதிப்பத்திரம் சாத்தியமாகுமென்று அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஏற்கனவே தெரிவித்திருந்தார். இது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும் என்ற வகையில் இதனைச் சாத்தியப்படுத்த சகலரும் ஒத்துழைக்க வேண்டும்.



ஒரு சமூகம் தலைநிமிர்ந்து வாழ்வதற்கு அச்சமூகத்தின் உரிமைகளை உரியவாறு உறுதிப்படுத்த வேண்டியது அவசியமாகும். இல்லையேல் அச்சமூகத்தின் அபிவிருத்தி தடைப்படுவதோடு, ஏனைய சமூகங்களுக்கும் இச்சமூகத்திற்கும் இடையிலான விரிசல் நிலை அதிகரித்துக் கொண்டே செல்லும். இதன் பாதக விளைவுகள் அதிகமாகும். இந்நிலையில் மலையக பெருந்தோட்ட சமூகம் இந் நாட்டிற்கு வருகைதந்து 200 வருடங்கள் கடந்துள்ளபோதும் இன்னும் கூட பல்வேறு உரிமைகள் உறுதிப்படுத்தப்படாத நிலையில் நாட்கூலிகளாக வாழ்க்கையை கொண்டு நடத்துவது வருந்தத்தக்க விடயமாகும்.

அடிப்படை தேவைகள் கூட பூர்த்தி செய்யப்படாத நிலையில் இம்மக்கள் அவல வாழ்க்கை வாழ்வது சகலரினதும் கவனத்தையும் ஈர்த்துள்ளது. மலையக அரசியல்வாதிகள் ஆட்சியாளர்களை வலியுறுத்தி அவ்வப்போது சிற்சில உரிமைகளை பெற்றுக் கொடுத்து வருகின்றபோதும் அவை பூரணத்துவம் மிக்கதாக அமையவில்லை. ஆட்சியாளர்கள் இம்மக்களுக்கு அள்ளிக் கொடுக்காவிடினும் கிள்ளிக் கொடுப்பதற்கும் தயாராக இல்லை. அவ்வாறே 'சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுப்பதாக இல்லை' என்பதற்கேற்ப ஆட்சியாளர்கள் ஒரு சில வேளை இம்மக்களுக்கு சில உரிமைகளை வழங்க முன்வருகின்றபோதும் இனவாதிகள் இதற்கு முட்டுக்கட்டையாக இருப்பது கடந்தகால வரலாறாகும்.

### காணிசீர்திருத்தச் சட்டம்

தேர்தல் காலங்களில் பெருந்தோட்ட மக்களின் வாக்குகளில் கவனம் செலுத்தும் பெரும்பான்மை கட்சிகள் பின்னர் இம்மக்களின் அபிவிருத்தியில் கவனம் செலுத்துவதில்லை என்பது பொதுவான குற்றச்சாட்டாகும். இக்குற்றச்சாட்டில் உண்மை இல்லாமலும் இல்லை. பெரும்பான்மை அரசியல்வாதிகள் கூட இக்குற்றச்சாட்டின் நியாயத்தன்மையைப் புரிந்து கொண்டு கருத்து வெளியிட்டு வருகின்றனர்.' தேசிய பொருளாதாரத்துக்கு பாரிய பங்களிப்பு செய்துவரும் தோட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த எந்தவொரு அரசாங்கமும் நடவடிக்கை எடுக்கவில்லை.



200 வருடங்கள் கடந்தும் அவர்களுக்கு சொந்தமாக வீடோ அல்லது காணியோ இல்லை. மரணித்தால் அடக்கம் செய்வதற்கு மயானமும் இல்லை' என்று பாராளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத் அண்மையில் நியாயப்படுத்தி பேசியிருந்தமையும் இங்கு நினைவுகூரத்தக்கதாகும்.

இதேவேளை 'இலங்கை நாடானது அதன் 75% மக்களான சிங்களவர்களுக்கே சொந்தமானது. சிறுபான்மையினர் எங்களுடன் இந்த நாட்டில் வாழலாம். ஆனால் அவர்கள் உரிமைகள் என்ற அடிப்படையில் சாத்தியமற்ற எதனையும் கோரிக்கையாக முன்வைக்க முடியாது' என்றவாறு இனரீதியான கருத்துக்களும் கடந்தகாலத்தில் வெளிப்படுத்தப்பட்டிருந்தமையும் தெரிந்த தேயாகும

எவ்வாறெனினும் உரிமைகள் வரிசையில் மலையக மக்களின் காணியுரிமை குறித்தும் நீண்ட காலமாகவே குரலெழுப்பப்பட்டு வருகின்றது. காணியுரிமை நடவடிக்கைகளிலும் இனவாதம் தலைவிரித்தாடுவது புதிய விடயமல்ல. இலங்கையில் விவசாய நிலமற்ற குடியானவர்கள் பெருமளவினராகக் காணப்படுவதுடன், இதற்காக மேற்கொள்ளப்பட்ட வரண்ட வலயக் குடியேற்றங்கள் போதியளவு விளைவுகளை ஏற்படுத்தவில்லை.



எனவே நிலமற்றவர்களுக்கு நிலம் வழங்குதல், அதன்மூலம் நிலவுரிமை பெற்ற விவசாயிகள் சிறந்த முறையில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு அந்நிலங்களில் உற்பத்தித்திறனை அதிகரிக்க வழிசெய்தல் என்ற நோக்கங்களின் அடிப்படையில் நிலச்சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டது. இதற்கேற்ப 1972 இல் கொண்டுவரப்பட்ட காணி உச்சவரம்பு சட்டமும், அதன் தொடர்ச்சியான நடவடிக்கைகளும் தேயிலைக் காணிகளின் உடைமைகளில் பாரிய மாற்றங்களுக்கு வித்திட்டன. இச்சட்டத்தின் கீழ் இலங்கையில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் காணிகளின் உடைமைகளுக்கு உச்சவரம்பு விதிக்கப்பட்டது.

இதன்படி நெற்செய்கை மேற்கொள்ளப்படும் நிலங்களாயின் 10 ஹெக்டேயருக்கு மேற்பட்ட தனியுடைமைகளும், பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் நிலங்களாயின் 20 ஹெக்டேயருக்கு மேற்பட்ட தனியார் உடைமைகளும் நிலச்சீர்திருத்த ஆணைக்குழுவினரால் சுவீகரிக்கப்பட்டன. 1972 இல் பெருந்தோட்டக் காணிகளில் சிறிய பகுதியினை மட்டுமே சுவீகரிக்க முடிந்தது. எனினும் 1972 இனை தொடர்ந்து வந்த காலப் பகுதியில் தேயிலைக் காணிகளைப் பொறுத்த வரையில் மேலும் 13,862 ஹெக்டேயர் காணிகள் காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவினால் சுவீகரிக்கப்பட்டன. 1975 ம் ஆண்டு காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவின் இரண்டாவது நடவடிக்கையின்போது பெரும்பாலான பெருந்தோட்டக் காணிகள் சுவீகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

### கோரிக்கை புறக்கணிப்பு

இவ்வாறு சுவீகரிக்கப்பட்ட காணிகள் பெரும்பான்மையினருக்கே பகிர்ந்தளிக்கப்பட்டவரலாறு கசப்பானதாகும். 1980 இல் பயனற்ற தேயிலைக் காணிகள் என சுமார் 10,000 ஹெக்டேயர் காணிகள் கம்பளை, கண்டி, உலப்பனை, கடுகண்ணாவை பகுதியில் இனங்காணப்பட்டன. இந்நிலத்தை மாற்றுப்பயிர் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த வேண்டும் என்று திட்டமிடப்பட்டது. உலக வங்கியும் இத்திட்டத்திற்கு அனுசரணையாக இருந்ததுடன் இத்திட்டத்தின் கீழ் ஏலக்காய்,கராம்பு போன்ற வாசனைப் பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்று அரசாங்கம் திட்டமிட்டு சுவீகரிக்கப்பட்ட தேயிலைக் காணிகளை காணியற்ற கிராமிய மக்களுக்கு பகிர்ந்தளித்தனர்.



இந்நிலையில் தோட்டத்தில் வேலைசெய்யும் இந்திய வம்சாவளியினருக்கும் காணிகள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை புறக்கணிக்கப்பட்டு கிராமிய மக்கள் மட்டுமே காணிவழங்கலில் உள்ளீர்க்கப்பட்டனர். மலையக தமிழ் மக்கள் வாழும் பகுதிகளிலிருந்து திட்டமிடப்பட்ட அடிப்படையில் அவர்களை வெளியேற்றும் நடவடிக்கைகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசாங்கங்கள் துணைபோயின.

நாட்டில் பெருந்தோட்ட தேயிலை விளை நிலங்கள் அபிவிருத்தி என்னும் போர்வையில் சுவீகரிக்கப்பட்ட வரலாறுகளும் அதிகமுள்ளன. இதனால் மலையக மக்களின் இருப்பு சிதைக்கப்பட்டதோடு அரசியல் உள்ளிட்ட பல துறைகளிலும்அவர்கள்பாதிப்பைஎதிர்நோக்க வேண்டியேற்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் நட்சா திட்டம், மகாவலி குடியேற்றம்,தோட்டக்கொத்தணிமுறை, திட்டமிடப்பட்ட குடியேற்றம் (1972, 1975,1977ம் ஆண்டுகளில் தீவிரமாக இடம் பெற்றது) என்பன மலையக மக்களின் பலத்தைக் குறைக்கும் முயற்சியேயாகும்.

திட்டமிடப்பட்ட குடியேற்றங்களுக்கு துணைபோகும் வகையில் நிலச்சீர்திருத்தங்கள், பன்முகப்படுத்தல், தோட்டப்புற கிராமப்புற ஒருங்கிணைப்பு என்ற பெயர்களில் 77 ம் ஆண்டு 81 ம் ஆண்டு 83 ம் ஆண்டுகளில் பரவலாக இனக்கலவரங்கள் ஏற்பட்டது. இந்த

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்

# முள்ளிவாய்க்காலில் 'அவர்கள்' வழங்கிய கஞ்சி!

"உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற இந்தப் பாத்திரம், உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய ரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது. என்னை நினைவு கூறும்படி இதைச் செய்யுங்கள் "- லூக்கா

இதுவரை மானுடம் கண்டிராத ஓர் பேரவலத்தின் சாட்சியாக நிற்கும் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் இறுதி நாட்களின் கொடூரங்களை உலகுக்கு சொல்லும் வரலாறாக 'அவர்கள்' வழங்கிய உப்புக்கஞ்சி நிலைத்திருக்கும்




இனப்படுகொலை என்ற சொல்லைக் கேட்டாலே ஆயுதங்கள், மரணங்கள், நில ஆக்கிரமிப்புகள், ஓலங்கள், ராணுவ அத்துமீறல்கள், பண்பாட்டுச் சீரழிப்புக்கள், பொருளாதாரச் சூறையாடல்கள் என மானுடத்தின் வதைகள் நமது நினைவுக்கு வந்து செல்லும்.

அதுவும், தமிழர்களுக்கு அது குறித்து நினைத்த மாத்திரத்தில் முள்ளிவாய்க்கால் பேரழிவு கண்களுக்கு முன்னால் வந்து நிற்கும். அத்தகைய முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் ஆறாத வடுக்களோடு வலிகளைத் தாங்கி நிற்கிற தமிழினத்திற்கு கூடுதலாக இன்னுமொரு வார்த்தை நினைவில் வந்துபோகும் அதுதான் பசி, பட்டினி.



2006 ஆம் ஆண்டில் சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்போடு, தீவிரவாதத்திற்கு எதிரான போர் என சிங்களப்பேரினவாதம் முன்னெடுத்த திட்டமிட்ட இன அழிப்பு 2009 ஆம் ஆண்டு முல்லைத் தீவு மாவட்டத்தின் முள்ளிவாய்க்கால் பகுதியில் மே மாதம் 18 ஆம் தேதியன்று 1,50,000 மக்களின் படுகொலையோடு நிறைவடைந்தது.

இரசாயனக் குண்டுகள், விஷவாயு குண்டுகள், கொத்துக்குண்டுகள், ஷெல் குண்டுகள், வெள்ளை பாஸ்பரஸ் குண்டுகள், பல்குழல் எறிகணைகள், ஆட்லெறி குண்டுகள் என உலக நாடுகளால் தடைசெய்யப்பட்ட அனைத்து ஆயுதங்களைக் கொண்டும் நடத்தப்பட்ட இந்த இன அழிப்புப் போரை சர்வதேச சமூகம் கைகட்டி, வாய்மூடி மௌனமாய் வேடிக்கை பார்த்த அந்த மே 18 ஆம் நாளை ஆண்டுதோறும் உலகம் முழுதும் வாழும் தமிழர்கள், மனித உரிமையாளர்கள், விடுதலைப் போராட்ட இயக்கங்கள் 'தமிழினப்படுகொலை நாளாக' நினைவுகூர்ந்து



சிவப்பிரியன் செம்பியன்

வருகின்றனர்.

விளக்கேற்றி, மெழுகுவர்த்திகள் ஏந்தி, மலர் வணக்கம் செய்து நடைபெறும் இந்த நினைவேந்தல் நிகழ்வில் இந்தாண்டு 'முள்ளிவாய்க்கால் உப்புக் கஞ்சி' என்ற ஊழியின் உணவு வழங்கப்பட்டது. முன்னமே, சொன்னது போல, முள்ளிவாய்க்கால் என்றால் தமிழினத்திற்கு கூடுதலாக நினைவில் வந்துபோகும் அந்த பசிப்பட்டினியின் குறியீடே



இந்த 'முள்ளிவாய்க்கால் கஞ்சி'.

இப்போது பேசும் பொருளாக மாறியுள்ள இந்த 'முள்ளிவாய்க்கால் கஞ்சி' தமிழீழ நடைமுறை அரசின் (DeFacto State) தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கடைசி உறுப்பினரின் இறுதி மூச்சுவரை வழங்கப்பட்டது. போர் நடைபெறும் பகுதியில் நிற்கும் மக்களுக்கு அத்தியாவசியப் பொருள்களை வழங்க வேண்டியது அந்த போரை முன்னெடுக்கும்



அரசின் பொறுப்பு.

மருத்துவமனைகள் மீதும், மக்கள் அதிகம் இருந்த பகுதிகள் மீதும் கொத்துக்குண்டுகளைப் போட்டு கொன்ற சிங்களப் பேரினவாத அரசு இந்த சர்வதேச விதிமுறையை மட்டும் எப்படி கடைப்பிடிக்கும் ?.

மக்களிடம் இருந்த உணவுக் களஞ்சியங்கள் மீதும் தாக்குதல் மேற்கொண்டு மக்களின் வாழ்வாதாரங்களை முற்றாக அழித்த சிங்கள அரசின் திட்டமிட்ட செயற்பாட்டால், பட்டினிச்சாவில் தவித்த மக்களை காப்பாற்றியது தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் வழங்கிய இந்த 'முள்ளிவாய்க்கால் கஞ்சி' தான்.

சாவின் விளிம்பில் நின்று இடம்பெயர்ந்து கொண்டிருந்த மக்களுக்கு கிடைத்த பொருள்களைக் கொண்டு மக்களின் பட்டினியை போக்க மாத்தளன் பகுதியில் தயாரித்து வழங்கத் தொடங்கிய கஞ்சி, முள்ளிவாய்க்கால் வரை தொடர்ந்து வழங்கப்பட்டது.

ஆனந்தபுரத்தில் பீரங்கி டாங்கிகளால் தகர்க்கப்பட்ட தென்னைகளில் இருந்து சேகரிக்கப்பட்ட, பிடுங்கப்பட்டதேங்காய்கள், தமிழீழ போராட்ட இயக்கத்திடம் இருந்த அரிசி, காடுகளில் சேகரிக்கப்பட்ட விறகு, ஆங்காங்கே கிடைத்த ஊற்று தண்ணீர் இவற்றால் தயாரிக்கப்பட்ட கஞ்சிதான் அது. ஒவ்வொரு குடும்பத்துக்கும் அவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கஞ்சி வழங்கப்பட்டது. பசிப்பட்டினியால் தமது மக்கள் சாகக் கூடாது என்பது அந்தப் போராட்ட இயக்கத் தலைவனின் அதியுச்சக் கட்டளையாக இருந்தது. சிங்கள ராணுவத்தின் கண்களில் மண்ணைத் தூவி, பதுக்கி வைக்கப்பட்டிருந்த உணவுப்பொருள்கள் தோண்டி எடுக்கப்பட்டு அதிகாலை 2 மணியளவில் தயாரிப்பு



நிலையங்களுக்கு கொண்டு சேர்க்கப்படும்.

அதன்மூலம் தயாரிக்கப்படும் கஞ்சி, 8 மணிக்கு முன்னதாக மக்களுக்கும், ஐ.நா. அலுவலர்களுக்கும், மருத்துவ பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டு வந்தன. மனித நேயமற்ற தாக்குதல்கள், இறுக்கமான பொருளாதாரத் தடைகளுக்கு இடையிலும் மக்களில் ஒருவர்கூட பட்டினியால் சாகக்கூடாதென தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பணியாற்றியது. உலகில் நடைபெற்ற எத்தனையோ விடுதலைப் போராட்டங்களில், மக்களின் உணவை கொள்ளையடித்த சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

ஆனால், த.வி.பு இனவிடுதலைப் போர் நடவடிக்கைகளில் மட்டும்தான் போராளிகள் மக்களுடன் இணைந்து தமக்குக் கிடைத்த உணவை பகிர்ந்து உண்டனர். மக்களை காப்பாற்ற தமது உயிரைத் துறந்தனர்.

பேரிடர் இடப்பெயர்வின் யூதர்கள் அருந்திய ஓர் உணவை "பாஸ் ஓவர்" என இன்றும் வழக்கமாக நடைமுறையிலுள்ளதைப் போல ஈழத்தமிழர்களின் பொடியன்கள் தயாரித்து தந்த அமிழ்தான 'முள்ளிவாய்க்கால் கஞ்சி' வரலாற்றில் நிலைபெறும்.

முள்ளிவாய்க்காலினை பொது பண்பாட்டுக் குறிப்பாக மாற்றும். சிங்களப் பேரினவாதத்திற்கு எதிராக மட்டுமல்ல, சர்வதேச வல்லாதிக்க நாடுகளின் பங்களிப்பையும், ஐ.நாவின் கள்ள மௌனத்தையும் தீவிரக் கேள்விக்குள்ளாக்குகிற தமிழர்களின் எதிர்ப்புக் குறியீடாக வருங்காலத்தில் மாறும் என்பது உறுதி.

• • •

# பேசுவோம் போரிடுவோம்

## - நூல் வெளியீடு-




ஈழத்தீவின் தொன்மையான வரலாற்றில் தமிழ்த் தேசிய இனம் தமக்கான தேசத்தில் தம்மைத் தாமே ஆளும் அரசாட்சி கொண்ட தேசமாக பல ஆயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வந்தது வரலாறாகும்.

பிற்கால வரலாற்றில் சிங்கள இனமும் இத்தேசத்தில் எவ்வாறு வந்து சேர்ந்தார்கள் என்பதை வரலாற்று ரீதியாக நிறுவப்பட்ட சான்றுகள் ஆதாரபூர்வமாக உறுதிப்படுத்தப் பட்டதை அறிவோம்.



தமிழர் தேசம் திட்டமிட்ட இனவழிப்பை எதிர் கொண்டு அதற்கெதிராக போராட வேண் டிய வரலாற்றை நோக்கிப் பயணித்த காலத்தில் தன்னெழுச்சியாக தன் தலைமையில் ஒரு விடுதலை இயக்கம் கட்டி போராடி வந்த திரு. க. வே. பாலகுமாரன் அவர்கள் காலத்தின் தேவை கருதி எமது தேசிய தலைவரையே தனது தலைவராக ஏற்றுக்கொண்டு விடுதலைப் புலிகள் அமைப்போடு தன்னை இணைத்துக்கொண்டு இறுதிவரை களத்தில் நின்று தலைவரோடு தோள்நின்ற விடுதலைப் புலிகளின் சிறப்பு உறுப்பினரும் ஆய்வாளருமான திரு. க. வே பாலகுமாரன் அவர்களது ஆக்கங்களின் தொகுப் பான பேசுவோம் போரிடுவோம் என்ற நூல் வெளியீட்டு நிகழ்வு இலண்டன் அல்ப்பேட்டன் பகுதியில் பிரித்தானிய தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினால் கடந்த ஞாயிற்றுக்கிழமை(12) ஏற்பாடு செய்யப்பட்டது.

பிரித்தானிய தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் வட மேற்கு இலண்டன் மாவீரர் பணி மனைப் பொறுப்பாளர் திரு. கமல் அவர்கள் பொதுசுடரினை ஏற்றிவைத்தார்கள்.

தமிழீழத்தேசியக்கொடியினைபிரித்தானிய தமிழர் ஒருங்கிணைப்பு குழுவின் மகளிர் அணி பொறுப்பாளர் தேவதர்சினி தேவராஜா அவர்கள் ஏற்றிவைத்தார்கள். தாயக விடுதலைப் போரிலே வீரச்சாவினை தழுவிக்கொண்ட மாவீரர்களுக்கும் பொதுமக்களுக்கும் அகவணக்கம் செலுத்தப்பட் டது.



தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் மகளிர் அணியை சார்ந்த திருமதி மாதுமை லோகேஸ்வரன் அவர்கள் வரவேற்புரையினை வழங்கினார்கள்.

தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் கலை பண்பாட்டுக் கழக ஏற்பாட்டில் நடன ஆசிரியர் திருமதி ஷாமினி கண்ணன் அவர்க ளின் மாணவிகளாகிய சுருதி கண்ணன், ஸ்வேதா சுரேந்திரன் மற்றும் யவிஷா தயாகரன் நடனத்தினை வழங்கினார்கள். இன்றய நிகழ்வின் பிரதான விடயாமான பேசுவோம் போரிடுவோம் நூலின் வெளியீட்டு நிகழ்வுகளை கவிஞர் திரு. கந்தையா இராஜமனோகரன் அவர்கள் தொகுத்து வழங்கினார்கள்.

இலக்கியவாதி மற்றும் எழுத்தாளர் திருமதி மாதவி சிவசீலன் மற்றும் ஊடகவியலாளர் மற்றும் அரசியல் விமர்சகர் திரு. அருஸ் அவர்கள் பேசுவோம் போரிடுவோம் நூல் சார்ந்த உரையினை வழங்கினார்கள். அனைத்துலகத் தொடர்பக நிர்வாக பொறுப்பாளர் திரு தினேஷ் அவர்கள் விடுதலைப்புலிகளின் சிறப்பு உறுப்பினர் க. வே. பாலகுமாரன் அவர்களின் தமிழீழ விடுதலைப் போராட்டம் சார்ந்த நினைவுப்பகிர்வினை வழங்கி னார்கள். தொடர்ந்து க.வே.பாலகுமாரன் அவர்கள் பற்றிய சிறு காணொளி ஒன்று ஒளிபரப்பப்பட்டது. நூலின் பிரதிகளை கா.வே பாலகுமாரன் அவர்களின் மகள் மகிழினி வழங்கிவைத்தார்.



பிரித்தானிய தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் கலைபண்பாட்டுக் கழகம் சார்பாக திருமதி உமாகாந்தி அவர்கள் நன்றியுரையினை வழங்கினார்கள். இவர் தமிழர்கல்வி மேம் பாட்டுப்பேரவை முன்னாள் இயக்குனரும் 20 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் கல்வியையும், ஆசிரியர் பணியையும் முன்னெடுத்த மூத்த ஆசிரியரும் கேம்ப்ரிட்ச் பல்கலைக்கழகத்தின் தமிழ் தேர்வுக்கான ஆய்வாளருமாவார். தொடர்ந்து தமிழீழத் தேசியக்கொடி கையேந்தப்பட்டு நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும் பாடல் ஒலிக்கப்பட்டது.



பிரித்தானிய தமிழர் ஒருங்கிணைப்பு குழு அரசியல் துறை பொறுப்பாளர் திரு. நியூட்டன் அவர்கள் உறுதிமொழியுடன் நிகழ்வானது நிறை வடைந்தது.

**நன்றி: ஈழம்ரஞ்சன்**

# றாவா (Rafah) நகர் மீதான இஸ்ரேலின் ஆக்கிரமிப்பை

# தடுத்து நிறுத்தத் தவறிய அமெரிக்க அரசு

தமிழில்: ஜெயந்திரன்

காஸாவின் றாவா *(Rafah)* நகரத்தை முழு அளவில் ஆக்கிரமிக்கப் போவதாக, இஸ்ரேல் கடந்த பல மாதங்களாகவே அச்சுறுத்தி வந்திருக்கிறது. அமெரிக்காவோ மிகவும் காலந்தாழ்த்தியே இந்த நகர்வுக்கு எதிராகத் தமது எச்சரிக்கையைப் பதிவுசெய்தது மட்டுமன்றி, போர்நிறுத்தத்துக்கும் அழைப்பு விடுத்திருந்தது. இது எவ்வாறிருப்பினும், பைடன் *(Biden)* தலைமையிலான தற்போதைய அமெரிக்க நிர்வாகத்தைப் பொறுத்த அளவில், மேற்குறிப்பிட்ட விடயத்தில் நேரத்துக்கு நேரம் தமது நிலைப்பாட்டைமாற்றியமைத்துவந்திருப்பதுடன், ஹமாசுடன் இஸ்ரேல் ஒரு உடன்பாட்டுக்கு வரவேண்டும் என்பதில் உருப்படியான வகையில் இஸ்ரேல் மீது எந்தவிதமான அழுத்தத்தையும் இதுவரை மேற்கொள்ளவில்லை.



போர்நிறுத்த முன்மொழிவைத் தாம் ஏற்றுக்கொண்டிருப்பதாக, மே மாதம் 6ம் திகதி ஹமாஸ் அறிவித்ததைத் தொடர்ந்து, காஸா முழுவதும் மக்கள் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியிருந்தனர். ஹமாசுடன் போர் நிறுத்தம் தொடர்பாக, ஓர் உடன்பாட்டுக்கு வருவதற்கு இஸ்ரேல் மறுப்புத் தெரிவித்ததுடன் காஸாக் கொண்டாட்டங்கள் அனைத்தும் ஓர் முடிவுக்கு வந்தன. அதுமட்டுமன்றி, அமெரிக்காவின் எதிர்ப்புகளையும் மீறி, காஸாப் பிரதேசத்தின் தென்பகுதியின் கடைசி நகரமான றாவா மேல் ஒரு தரைவழித் தாக்குதலைத் தாம் மேற்கொள்ள விருப்பதாகவும் இஸ்ரேல் அறிவித்தது.

இஸ்ரேலின் பிரதம மந்திரியான பெஞ்சமின் நெத்தன்யாகுவோ, ஹமாஸ் முற்று முழுதாக அழிக்கப்பட்ட பின்னரே பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படும் என்று சொல்லி, போர் நிறுத்தத்தை தான் நிராகரிப்பதாக அறிவித்தார்.



றாவா நகரத்தில் நூற்றுக்கு மேற்பட்ட இலக்குகள் மேல் தாக்குதல்களை மேற்கொண்டு, பல அப்பாவிப் பொதுமக்களையும் கொன்றதுடன், காஸாவுக்கும் எகிப்துக்கும் இடையே அமைந்திருக்கும் கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்த றாவா சந்தியையும் *(Rafah Crossing)* இஸ்ரேல், இராணுவ ரீதியாகக் கைப்பற்றியிருந்தது. இவ்வாறான தாக்குதல்களை மேற்கொண்ட இஸ்ரேல், போர்நிறுத்தத்தை ஏற்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் எடுக்கும் நோக்கத்து டன் கெய்றோவுக்கு ஒரு தூதுக்குழுவை அனுப்பியிருப்பதாக செய்தி வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

ஹமாசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கை வரைபு, சிஐஏ *(CIA)* மற்றும் இஸ்ரேல் புலானய்வு அதிகாரிகளால் வரையப்பட்டிருந்த வரைபுக்குச் சமனானது என்பது மட்டுமன்றி, மிகவும் பலமான ஒரு முன்மொழிவு என்று அன்ரனி பிளிங்கன் *(Antony Blinken)* மேற்குறிப்பிட்ட முன்மொழிவுக்குப் புகழாரமும் சூட்டியிருந்தார்.



இதற்கிடையில், ஹைவா *(Haifah)*, ரெல் அவிவ் *(Tel Aviv)* போன்ற நகரங்களில், பணயக்கைதிகளாகப் பிடிக்கப்பட்டிருப்பவர்களின் குடும்பங்களால் ஒழுங்குசெய்யப்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள், 'பணயக் கைதிகளின் விடுதலையை உள்ளடக்கியிருந்த போர்நிறுத்த உடன்படிக்கையை இஸ்ரேல் அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும்' என்பதை வலியுறுத்தி, ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டிருந்தனர். இஸ்ரேல் காவல் துறையினருடன் கைகலப்பில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள், 'இஸ்ரேல் அரசைச் சேர்ந்தவர்கள் அனைவரும் பொய்யர்கள்' என்று கூறியதோடு, பணயக்கைதிகளான தமது உறவுகள் விடுதலை செய்யப்படாவிட்டால் நாட்டையே எரிக்கப்போவதாக அச்சுறுத்தியிருந்தனர்.



அதற்கு அடுத்த நாள், போர் நிறுத்தம் தொடர்பாக வெளிவந்த செய்திகளில் எந்தவித உண்மையும் இல்லை என்று ஊடகவியலாளர்களை நம்பவைத்த அமெரிக்க அரசு, ஹமாஸ் போர்நிறுத்த உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டிருக்கவில்லை என்றும், முழு உலகமும் இச்செய்தியைத தவறாகக் கையாண்டுள்ளது என்றும் முழுப்பூசணியைச் சோற்றிலே மறைக்கும் வகையில் செயற்பட்டது. இந்நிகழ்வுக்கு ஒரு சில நாட்களுக்கு முன்னர் தான் அமெரிக்க அதிபரான ஜோ பைடன், றாவா நகரத்துக்கு எதிராக ஒரு முழு அளவிலான வலிந்த தாக்குதலில் இஸ்ரேல் பயன்படுத்தக்கூடிய ஆயுதங்களை தாம் இஸ்ரேலுக்கு வழங்க மாட்டோம் என்று தெரிவித்திருந்தார். முழு அளவிலானதாக்குதல்என்றால்என்னஎன்பதையும், சிவப்புக்கோடு எங்கே வரையப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவிக்க மேற்குறிப்பிட்ட சந்திப்பில் பைடன் மறுத்துவிட்டார்.

தென் காஸாவில் அமைந்திருக்கும் எகிப்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையேயான பிலடெல்விப் பாதையை *(Philadelphi Corridor)* ஆக்கிரமித்து, மீண்டும் இராஜீக உறவு ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்த, 1979ம் ஆண்டில் வரையப்பட்ட காம்ப் டேவிட் *(Camp David)* ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்பட்ட விடயங்களை இஸ்ரேல் இராணுவம் மீறியதைத் தொடர்ந்து, அமெரிக்காவின் இந்த தெளிவற்ற அணுகுமுறை வெளிச்சத்துக்கு வந்தது.



எல்லைக் கடவையை நிர்மூலமாக்கி, அந்த நிகழ்வைக் காணொளியாக்கிய இஸ்ரேலின் கிவாற்றி *(Givati Brigade)* படைப்பிரிவை அங்கு அனுப்பியது மட்டுமன்றி, பட்டினியின் விளிம்பில் காஸாவில் பரிதவித்துக்கொண்டிருக்கும் அப்பாவிப்பொதுமக்களுக்கு உணவு விநியோகத்துக்கான முக்கிய போக்குவரத்துப் பாதையையும் இஸ்ரேல் முற்றாக மூடியிருக்கின்றது.

### பலவீனமானதும் குழப்பம் நிறைந்ததுமான அமெரிக்க அணுகுமுறை

"றாவா நகரம் ஆக்கிரமிக்கப்படாவிட்டால், இஸ்ரேல் போரில் தோல்வியைத் தழுவும்" என்று பெப்பிரவரி மாதத்திலிருந்தே நெத்தன்யாகு மீண்டும் மீண்டும் நினைவுபடுத்திக் கொண்டிருக்கும் பின்புலத்தில், இவ்வருடத்தின் ஆரம்பத்தில் இருந்தே றாவா நகரத்தைத் தாம் ஆக்கிரமிக்கப் போவதாக இஸ்ரேல் அரசு அச்சுறுத்தலை விடுத்துக்கொண்டிருந்தது. இந்த நகர்வு, இஸ்ரேலுக்குத் தோல்வியையே கொண்டு வரும் என்பது மட்டுமன்றி, போக்கிடமின்றித் தவித்துக்கொண்டிருக்கும் பத்து இலட்சத்துக்கும் அதிகமான அப்பாவிப் பொதுமக்களின் வாழ்க்கையையும் கேள்விக்குறிக்குள் உள்ளாக்கியிருப்பதாக அமெரிக்கா தெரிவித்து வந்தது.



மார்ச் மாதத்தின் தொடக்கத்தில், எம்எஸ் என்பிசி *(MSNBC)* என்ற ஊடகத்துக்கு பைடன் ஒரு

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# சர்வதேசத்திற்கு செய்தி சொல்ல முன்!

**இதயச்சந்திரன்**

அனைத்துலகத்திற்கு செய்தி சொல்ல முனைபவர்கள் ஒரு விடயத்தை ஆழமாகக் கவனிக்கவேண்டும்.

அந்த சர்வதேசத்திற்கு பல காதுகளும் உண்டு. பல கைகளும் உண்டு.அதன் மதிப்பீடுகள், அறம், வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் எல்லாம் இடத்துக்கு இடம் மாறும்.

'அது ஏனுங்க?' என்று கேட்டால், 'இராஜ தந்திரம், மூலோபாயம், தந்திரோபாயம், நாட்டு நலன்' என்கிற பதில்கள் அடுக்கடுக்காக வரும். இத்தகைய சொற்களை ஆய்வு செய்வதற்கு பல அரச சார்பற்ற -ஆனால் அதன் நிதியில் இயங்கும் நிறுவனங்கள் உள்ளன.

இவைதவிர உலக நாடுகளில் பல கூட்டுக்களும் உண்டு என்கிற விடயம் எம்மில் பலருக்குத் தெரியும்.

பொருளாதாரக் கூட்டு, இராணுவக்கூட்டு, இராணுவ-பொருளாதாரக்கூட்டு, நாடுகள் ஒன்றிணைந்த ஒன்றிய கூட்டு.



எண்ணெய்க்கூட்டு, எண்ணெய்+கூட்டு, பிராந்தியக்கூட்டு, 195 நாடுகளும் இணைந்த சாம்பார் கூட்டு, மனித உரிமை பேசும் நாடுகளின் கூட்டு, குற்றவியல் நீதிமன்றத்தை ஏற்றுக்கொண்ட தனிக்கூட்டு என பல வகைகள் உண்டு.

ஆகவே சர்வதேசம் என்பது முரண்பட்ட கூட்டுக்களின் சங்கமிப்பு என்று கூறுவதே சிறந்தது இரண்டு கண்களுக்குப் பக்கத்தில் தடுப்புக்களைப் போட்டவாறு உலகத்தை முழுமையாகப் பார்க்க முடியாது.

உலகப் பொருளாதாரத்தின் அசைவியக் கத்தைப் புரிந்து கொள்ளாமல் பூகோள அரசியல் மாற்றத்தை முழுமையாக தெரிந்து கொள்வது கடினம்.



சீனாவிற்கெதிராக பிலிப்பைன்சை உசுப்பி விடும் அமெரிக்காவின் பின்புலத்தில், Nickel என்ற கனிமத்தின் தேவை உண்டு. மின்சாரக் கார் உற்பத்தியில் அதன் பங்கு உண்டு.


தற்போது சீன மின்சாரக்காருக்கு 100% வரிவிதித்துள்ளார் பைடன். ஏனிந்தக் கோபம் என்று கேட்டால், 'மிகை உற்பத்தி, அதிகளவிலான சீனஅரச சலுகை' என்பார் அவர்.

Samsung மற்றும் தைவானின் TSMC ஐ அச்சுறுத்தி அமெரிக்காவில் ஆலையைப் போட வைத்த அதிபர் பைடன் , அதற்கு கொடுத்த சலுகைகள், முதலீட்டில் உதவி செய்தமை குறித்த கேள்விகளை சீனர்கள் தற்போது முன் வைக்கிறார்கள்.

இந்தப் பொருளாதார போட்டியில் நாணயப்போர், வர்த்தகப்போர், தொழில்நுட்பப் போர், சைபர் தாக்குதல் யாவும் இணைந்து வரும்.

அதன் உச்சநிலையில் ஆயுதப்போர் மூழும். 1929 இன் பொருளாதார வீழ்ச்சியை ,1945 இல் பெரும்போராகக் கண்டது இவ்வுலகம். 2008 இன் வீழ்ச்சி ,இன்றளவில் தடைகளின் உச்சத்தை நோக்கி நகர்ந்து உலகப்போராக மாறாமல் இருந்தால் மானுட குலத்திற்கு நல்லது.

ஆனாலும் அதனை கார்ப்பரேட் உலகமே தீர்மானிக்கும் என்பது இயங்கியல் விதி. அணுஆயுத நாடுகள் தமக்கிடையே மோதும் போது அதிக வரிவிதிப்பு, பொருளாதார தடை, சொத்து முடக்கம் போன்ற ஆயுதங்களையே பயன் படுத்துகிறது.



இவ்வகையான அழுத்தங்கள் அதிகரிக்கும் போது, உலக ஒழுங்கும் மாறும். புதிய கட்டமைப் புகளும் உருவாகும்.

அடிப்படையில், சந்தைக்கான போட்டி யும், உற்பத்திறன் அதிகரிப்பும், அதீத தொழில் நுட்ப வளர்ச்சியும், சில நிறுவனங்களின் சந்தை மதிப்பினை உயர்த்தியுள்ள Cloud Capital உம், படைத்துறை விரிவாக்கமும், நவீன இருதுருவ உலக ஒழுங்கினை தற்போது தீர்மானிக்கின்றன.

சந்தை மதிப்பில்,Amazon, Microsoft, Apple, Nvidia, Alphabet, Facebook,TSMC போன்ற கம்பனிகள் 2 றில்லியனை கடந்து விட்டன.

ஆகவே நாம் சர்வதேசத்திற்கு செய்தி சொல்வதானால், இந்த நுட்பமான உலக அரசியல்-பொருளாதார மாற்றங்களை கற்றுணர வேண்டும். ஆகவே இது குறித்து பேசுவோம். விவாதிப்போம்.

### ஈரான்-இந்தியாவின் துறைமுக ஒப்பந்தம்

ஈரானின் சபகர் (Chabahar) துறைமுக அபிவிருத்தி, அதனை 10 வருடங்கள் நிர்வகிப்பது தொடர் பாக நேற்று (13/5/24) ஒரு ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டுள்ளது.




இது நீண்டகாலமாக பேசப்பட்ட விடயம். இதனூடாக ஆப்கனிஸ்தான், மத்திய ஆசிய நாடுகள் மற்றும் ரஷ்யாவுடன் இணைப்பினை ஏற்படுத்துவதே இந்தியாவின் மூலோபாயமாகும்.

அண்மையில் இதற்குச் சமாந்தரமாக, இன்னொரு முன்னெடுப்பும் நிகழ்ந்தது. பிரிக்ஸ் கூட்டமைப்பில் சவுதியும் ஈரானும் அமீரகமும் இணைந்த வேளையில் அது மேலும் தீவிர மடைந்தது.

அந்நிகழ்வு கடந்த ஜீ20 மாநாட்டில் இந்திய பிரதமரின் வெற்றிப்பிரகடனத்தோடு வெளிப்பட்டது. சீனாவின் பட்டுப்பாதைத் திட்டம் முறியடிக்கப்பட்டுள்ளதாக மோடி பெருமைப் பட்டார்.

அதாவது இந்தியா-சவுதி அரேபியா-இஸ்ரேல்- கிரேக்கம் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளை இணைக்கும் 'பொருளாதாரப் பாதை' ஒன்றினை அமைக்கும் மேற்கின் திட்டத்திற்கு இங்குதான் அடித்தளமிடப்பட்டது.

இதில் இஸ்ரேல்-சவுதி உறவு முக்கியமா னது. ஆய்வுத் தளங்களில் பென்கூரியன் கால்வாய் குறித்தும் பேசப்பட்டது.

ஆனாலும் ஹமாசின் ஒருங்கிணைக் கப்பட்ட, இஸ்ரேல் மீதான திடீர் தாக்குதலானது, இந்தியாவின் புதிய பொருளாதாரப் பாதைக்கு வேட்டு வைத்துவிட்டது. அதன் எதிர்விளைவாக சவுதி அரேபியா இதிலிருந்து பின்வாங்கியது.

இந்தியாவின் இருவழிப்பாதையில் ஒன்றான மேற்குலக சார்புப் பாதையில் இஸ்ரேல்-ஹமாஸ் மோதல்கள் பின்னடைவினை ஏற்படுத் தியுள்ளதால், முதல் பாதையில் மீண்டும் பயணிக்க ஆரம்பித்துள்ளது இந்திய அரசு. அதுதான் ஈரான்-இந்திய ஒப்பந்தம்.

இரண்டு Economic Corridor களையும் இந்தியா விரும்புகிறது. அதுதான் இந்தியாவின் நீண்ட இலக்கு. ஆகையால் மேற்கையும் ரஷ்யாவையும் ஒரு சேரக் கையாளும் இந்திய இராஜதந்திரம் இனிப் பல சவால்களை எதிர்கொள்ளும்.

புதிய ஈரான்- இந்திய துறைமுக ஒப்பந்தத் தால் சீற்றமடைந்துள்ள அமெரிக்கா, இந்தியா மீதான பொருளாதார தடைகள் குறித்து வழமை போல் பேச ஆரம்பித்துள்ளது.

• • •

**கோணாவில் ... தொடர்ச்சி ...**

வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

யூனியன்குளம் கோணாவில் பகுதி யிலுள்ள கரிகாலன் கல்விக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர் களது பெற்றோர்களின் ஏற்பாட் டில் முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலை நினைவுகளுடன் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு நடைபெற்றது இந்நிகழ் வில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், தமிழின உணர்வாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

முள்ளிவாய்க்காலில் கடந்த 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற தமிழ் இனப் படுகொலையை நினைவூட்டும் வகையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு தமிழர் தாயகம் முழுவதும் பல்வேறு தடைகளை தாண்டி தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதேவேளை, எதிர்வரும் 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவிடத்தில் நினைவேந் தல் வார இறுதி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.

## ஈழத்தமிழ் மக் ... தொடர்ச்சி ...

பார்க்கின்றனர்.

ஆயுதப்போராட்டத்தில் இந்தியாவை எப்படி தமிழ் மக்கள் தோற்கடித்தார்களோ அதேபோல இந்தியாவின் இந்த இராஜதந்திரப் போரை எம் எதிர்கால சந்ததி உறுதியுடன் எதிர்கொண்டு முறியடிக்கும் என்பதை வரலாறு மீண்டும் ஒருமுறை இந்தியாவுக்கு உணர்த்தும்.

## ஆசிய-பசுபிக் ... தொடர்ச்சி ...

சீனாவும் ரஸ்யாவும் இணைந்து பணியாற்றுகின்றன. அங்கு நேட்டோ போன்ற கூட்டணிகள் அமைவது ஆபத்தானது. இரு நாடுகளும் சுயாதீன வெளிவிவகாரக் கொள்கைளுடன் பல்முனைவாக்கப்பட்ட ஜனநாயக உலக ஒழுங்கில் ஐக்கிய நாடுகள் சபையை மையமாக கொண்டு இயங்கத் தீர் மானித்துள்ளன. என அவர் தெரிவித்துள்ளார்.

ரஸ்யாவின் அதிபராக ஐந்தாவது தடவை பதவியேற்றுள்ள பூட்டின் தனது முதலாவது வெளிநாட்டுப் பயணமாக சீனாவுக்கு சென்றுள்ளார். அங்கு இரு நாடுகளும் பல புதிய உடன்பாடுகளில் கைச்சாத்திட்டுள்ளன.

ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் நேட்டோவின் விரிவாக்கம் இருக்காது என அமெரிக்கா தலைமையிலான நாடுகள் தெரிவித்து வருகின்ற போதும் அவர்கள் அந்த பிராந்தியத்தில் உள்ள நாடுகளை பல்வேறு படைத்துறை கூட்டணிகளில் இணைந்து வருவது இங்கு குறிப்பிடக்கதக்கது. 2021 ஆம் ஆண்டு அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் இணைந்து ஒரு படைத்துறை கூட்டணியை உருவாக்கியிருந்தன.

## இறந்தவர்களு ... தொடர்ச்சி ...

ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, திருகோணமலை சேனையூர் பகுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சியை பகிர்ந்து முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலை செய்யப்பட்ட மக்களை நினைவு கூர்ந்தவர்களை அநாகரீகமான முறையில் கைது செய்த இலங்கை பொலிசாரின் அத்துமீறலை கண்டிக் கின்றோம்.

உரிமையை வேண்டி போராடிய ஒரு இனத்தின் மீது, சர்வதேச நாடுகளை தவறாக வழிநடாத்தி இலங்கை அரசால் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட பாரிய இனவழிப்பினால், இறுதி எட்டு மாதங்களில் 146679 க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டு வலிந்து காணாமலாக்கப்பட்டனர்.

## திருகோணமலை ... தொடர்ச்சி ...

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது. இந் நிகழ்வில் ஆரம்பத்தில் முள்ளி வாய்க்காலில் உயிர் நீத்த ஆத் மாக்களுக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதை தொடர்ந்து உப்பு கஞ்சி பொது மக்களுக்கு அங்கிருந்த மக்களுக்கு வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது இதில் இலங்கை தமிழ் அரசு கட்சியின் மாவட்ட கிளை தலைவர் ச.குகதாசன் உட்பட அப்பிரதேச மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதனிடையே, ருகோணமலை மாவட்டம் சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சேனையூர் பகுதியில் கஞ்சி காய்ச்சி பரிமாறியதற்காக பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் நான்குபேரை இலங்கை நிதிமன்றம் தடுப்புக்காவலில் வைத்துள்ளது.

முள்ளி வாய்க்கால் கஞ்சி காய்ச்சி பரிமாறிய பல்கலைக்கழக மாணவி உட்பட நால்வர் சம்பூர் இலங்கை காவல்துறையினால் கைது செய்யப்பட்டனர்.

## சர்வதேச ... தொடர்ச்சி ...

கால் இனப்படுகொலை தொடர் பாக அவர்களை நினைவு கூற விடாமல் தடுத்துள்ளது இந்த நிலையில் மூதூரில் கைது செய் யப்பட்டவர்கள் தொடர்பில் ஐசிசிபி ஆர் தொடர்பான அறிக்கையை காவல்துறையினரிடம் நீதிமன்றம் கோரியுள்ளது இது தொடர்பில் சமர்ப்பணங்களை முன்வைத்து நீதிமன்றில் வாதாடிய சிரேஷ்ட சட்டத்தரணி சுகாஷ் மற்றும் முஸ்லிம் சட்டத்தரணிகளுக்கு இந்த நேரத்தில் நன்றிகளை தெரிவிக்கிறேன் பொய்யான குற்றச் சாட்டை பொலிஸார் முன்வைத்து நீதிமன்றில் தடை உத்தரவை பெற்று நீதிமன்றை ஏமாற்றியுள்ளனர்.

தற்போது நீதிமன்றம் தடையை நீக்கியுள்ளது. முள்ளிவாய்க்கால் படுகொலையின் போது அவர்கள் உணவை ஆயுதமாக பயன்படுத்தி கஞ்சியை பட்சிலம் குழந்தைகளுக்கும் கொடுத்துள்ளனர் இது போன்ற உள ஆற்றுப்படுத்தலுக்காக இதனை நினைவு கூறுகின்றனர் தமிழர்கள் இந்த மாதத்தில் களியாட்டங்களை தவிர்த்து உணர்வு பூர்வமாக நினைவேந்தலில் ஈடுபடுகின்ற வலி சுமந்த மாதமாக காணப்படுகிறது.

உள்ளக பொறி முறை மூலம் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது ஒற்றையாட்சி முறையை நீக்கி சமஷ்டியை கொண்டு வர வேண்டும் என்பதுடன் தமிழ் தேச மக்கள் எதிர்வருகின்ற ஜனாதிபதி தேர்தலை புறக்கணிக்க வேண்டும் என்றார்.

## அமெரிக்காவின் ... தொடர்ச்சி ...

இளைஞர்கள், உள்ளூர் அரச அதிகாரிகள் மற்றும் மதத் தலைவர்கள் ஆகியோரின் பலதரப் பட்ட கண்ணோட்டங்களை கேட் பதற்காக இந்தவாரம் நான் மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளேன் என்று ஜூலி சங் கூறியிருப்பதும் இங்கு முக்கியத்துவம் பெறுகிறது.

இதனிடையே, இலங்கையில் செயற்படும் உண்மை மற்றும் நல்லிணக்கத் திட்டமொன்று காணப்படுவது அவசியம் என தெரிவித்துள்ள அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான உதவி இராஜாங்க செயலாளர் டொனால்ட் லு, எதிர் வரும் தேர்தல்களில் வெற்றி பெறும் தலைவர்கள் இதனை முன்னெடுப் பார்கள் என எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார்.

இலங்கையின் தற்போதைய கடன் மறுசீரமைப்புத் திட்டம் குறித்து கருத்து தெரிவித்துள்ள அவர், அமெரிக்கா அபிவிருத்தி சகாவாக விளங்குவதற்கு தயார் இலங்கையின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு நிதி ஆலோசனை மற்றும் கடனை வழங்க தயார் எனவும் கூறினார்.




## நல்லூரில் ... தொடர்ச்சி ...

நினைவிடத்திற்கு முன்னால் நினைவேந்தலுடன் ஆரம்பமாகியது. குறித்த நிகழ்வு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஆவணப்பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டது. பெருமளவான மக்கள் இந்த கண்காட்சியை கண்டுவருகின்றனர்.

## இந்திய உணவு ... தொடர்ச்சி ...

எனப்படும் இரசாயணப்பொருட்கள் உள்ளதாக நியூசிலாந்தின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். இவ்வாறான குற்றச் சாட்டுக்கள் அமெரிக்கா உட்பட பல நாடுகளால் கடந்த வருடம் முன்வைக்கப் பட்டிருந்தது.

எதிலீன் ஒக்சைட் உணவுகள் கெட்டுப் போகாமல் இருப்பதற்கு உணவுப்பொருட்களுடன் சேர்க்கப்படுகின்றது. ஆனால் அது மனிதர்களில் புற்றுநோயை ஏற்படுத்துவதால் நியூசிலாந்து உட்பட பல நாடுகளில் அது தடை செய்யப்பட்டுள்ளது.

3.89 பில்லியன் டொலர்கள் பெறுமதியான மசாலாப் பொருட்களை இந்தியா 180 நாடுகளுக்கு கடந்த வருடம் ஏற்றுமதி செய்திருந்தது. ஆனால் புற்றுநோயை ஏற்படுத்தும் இரசாயணப் பொருட்கள் உள்ளதாக தெரிவித்து கடந்த மாதம் இந்த மசாலாப் பொருட்களின் விற்பனையை கொங் கொங் நிறுத்தியிருந்தது. சில மசாலாப் பொருட்களின் விற்பனைக்கு சிங்கப்பூரும தடை விதித்துள்ளது.

MDH and Everest ஆகிய நிறுவனங்கள் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், அவுஸ்திரேலியா, மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகள் உட்பட 180 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு உணவுப்பொருட்களை ஏற்றுமதி செய்கின்றன. ஆனால் இந்த நிறுவனங்களின் உணவுப்பொருட்களில் 14.5 விகிதமான இறக்குமதியை 2021 ஆம் ஆண்டில் இருந்து அமெரிக்கா நிராகரித்துள்ளது.

## ஸ்லோவாக்கிய ... தொடர்ச்சி ...

போட்டியிட்ட அவர் அதில் வெற்றி பெற்ற பின்னர் உக்ரைனுக்கான ஆயுத உதவியை நிறுத்தியிருந்தார்.

எதிர்க்கட்சியின் ஆதரவாளரான யுராட் சிந்துலா(71) என் பவரே இந்த தாக்குதலை மேற்கொண்டவர். அவர் உக்ரைனுக்கான ஆயுத விநியோக நிறுதத்திற்கு எதிரான போராடியவர் என்பதுடன், ஒரு பத்தி எழுத்தாளருமாவார்.

## றாவா (Rafah) நகர் ... தொடர்ச்சி ...

செவ்வியை வழங்கியிருந்தார். றாவா நகரத்தின் மேல் இஸ்ரேல் மேற்கொண்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கையைப் பற்றிக் குறிப்பிட்ட நேரத்தில், முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களை பைடன் முன்வைத்ததை ஊடகவியலாளர்கள் அவதானித்திருந்தார்கள்.

றாவா நகரத்தினுள் நுழைவது சிவப்புக் கோட்டைத் தாண்டுவதாகத் தான் இருக்கும் என்று கருத்துரைத்த பைடன் தொடர்ந்து கூறும் போது, "சிவப்புக் கோடு என்று அங்கு எதுமே இல்லை. எல்லா ஆயுதங்களையும் நான் நிறுத்தப் போகிறேன்....ஆனால் சிவப்புக் கோடுகள் அங்கே இருக்கின்றன. அவற்றை அவர் தாண்டினால்..." என்று முன்னுக்குப்பின் முரணாக அந்தச் செவ்வியில் பைடன் பேசிக்கொண்டிருந்தார்.

வோஷிங்டனில் உள்ள கொள்கை வகுப்பாளரின் இந்தச் சடுதியான மாற்றம், பைடனுடன் மட்டும் மட்டுப்படுத்தப்படவில்லை. பெப்பிரவரி மாதத்தின் தொடக்கத்தில், றாவா நகரத்தின் மேல் இஸ்ரேல் ஒரு தாக்குதலை மேற்கொள்ளுமாயின் அது 'ஒரு பேரழிவாக' அமையும் எனக்கூறி அமெரிக்கா அதனைக் கட்டாயம் எதிர்க்கும் என்று தெரிவித்தது. அந்த நேரத்தில் குறிப்பிட்ட தாக்குதலுக்குத் தனது படைகளைத் தான் தயார் செய்து வருவதாக நெத்தன்யாகு கூறியதோடு விமானத் தாக்குதல்களையும் அவர் அதிகரித்திருந்தார். ஆனால் பெப்பிரவரி மாதத்தின் நடுப்பகுதியில் 14 பில்லியன்கள் பெறுமதிவாய்ந்த இராணுவ உதவியை இஸ்ரேலுக்கு அனுப்ப அமெரிக்கா தயாராகிக்கொண்டிருந்ததோடு றாவா நகரத்தின் மீது மட்டுப்படுத்தப்பட்ட ஒரு தாக்குதலையே தாம் ஆதரிப்போம் என்றும் தெரிவித்தது.

நெத்தன்யாகு தொடர்பாக ஒரு விரக்தி யான நிலைக்கு பைடன் வந்துவிட்டதாக பெயர் குறிப்பிடாத சில அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்த தாக சில அறிக்கைகள் அப்போது வலம் வந்து கொண்டிருந்தன. அதற்குப் பின்னர் '6 வாரங்கள் நீடிக்கக்கூடிய ஒரு போர்நிறுத்தம்' தொடர்பாகப் பேசப்பட்டது. முஸ்லீம்கள் புனிதமாகப் போற்றுகின்ற றமடான் (Ramadan) மாதத்துக்கு முன்னர், இந்தப் போர்நிறுத்தம் அமுலுக்கு வரும் என்று பைடன் அப்போது பகிரங்கமாக அறிவித்திருந்தார். ஏன் இப்போது கூட 6வாரப் போர்நிறுத்தம் தொடர்பாக பைடன் நிர்வாகம் பேசிக்கொண்டிருக்கிறது. ஆனால் ஹமாசிடம் அமெரிக்கா கையளித்த முன்மொழிவில் போரை முற்றுமுழுதாக நிறுத்துவது தொடர்பாக அல்லது பல மாதங்களுக்கு நிறுத்துவது தொடர்பாக மிக விபரமான முறையில் ஒப்பந்த வரைபில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆயுத விற்பனைகள் தொடர்பாக வோஷிங்டனின் சட்டங்களில் உள்ள ஓட்டைக ளைப் பயன்படுத்தி, சத்தம் சந்தடியின்றி, காஸாவுக்கு எதிரான தாக்குதலில் பயன்படுத் தப்படக்கூடிய 100 ஆயுதக் கையளிப்புகளுக்கான அனுமதியை அமெரிக்க அரசு வழங்கியிருந்தது. பின்னர்றமடானுக்குஇரண்டுவாரங்களேஇருக்கும் தருணத்தில், ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு கவுன்சிலில் 'றமடான் மாதம் முடியும் வரை போர்நிறுத்தம் கடைப்பிடிக்கப்படவேண்டும்' என்ற தீர்மானம் முன்வைக்கப்பட்ட போது, அந்தத் தீர்மானத்தில் வாக்களிப்பதில் இருந்து அமெரிக்கா விலகியிருந்தது. இவ்வாறான விடயங்களுக்குப் பதில் அளிக்கும் விதமாக ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த உயர்நிலை அமெரிக்க அமெரிக்க அதிகாரிகள் ரெல்அவிவுக்கு மேற்கொள்ள இருந்த ஒரு பயணத்தை இஸ்ரேல் நிறுத்தியிருந்தது.

இது எவ்வாறிருப்பினும், மேற்குறிப்பிடப் பட்ட தீர்மானம் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புக் கவுன்சிலால் ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு அடுத்த நாள், குறிப்பிட்ட தீர்மானம் இஸ்ரேலைக் கட்டுப்படுத்த முடியாது என்று அமெரிக்க இராஜாங்க அமைச்சு செய்தி வெளியிட்டது. ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு கவுன்சிலின் வாக்குகளுக்கு உறுப்பு நாடுகள் கட்டுப்பட்டவை என்பதை அமெரிக்காவின் இந்தச் செயற்பாடு கேள்விக்குள்ளாக்குவதோடு, குறிப்பிட்ட தீர்மா னத்தை மீறுவதற்கான அனுமதியை அமெரிக்கா இஸ்ரேலுக்கு அளிக்கும் என்பதையும் உறுதிப் படுத்தியது. தனது நட்பு நாடான இஸ்ரேலுக்கு ஒரு தற்காலிக அழுத்தத்தை அமெரிக்கா கொடுத்த அதே நேரம், 'இஸ்ரேலுக்கான தனது ஆதரவு எந்த சூழலிலும் தொடர்ந்து இருக்கும்' என்று பொருள்படக்கூடிய வகையில், தீர்மானம் மேற்கொள்ளப்பட்ட அடுத்த நாளே குறிப்பிட்ட தீர்மானம் தொடர்பாகத் மறைமுகமாகத் தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தியது.

றாவா நகரத்தின் மீது ஒரு ஆக்கிரமிப்பு மேற்கொள்ளப்படுமாக இருந்தால் அது நிச் சயமாகப் அப்பாவிப் பாலஸ்தீன மக்கள் படு கொலை செய்யப்படும் ஒரு பயங்கரமான நிலையைத் தோற்றுவிக்கும் என்பதுடன், ஒரு மோசமான பட்டினி நிலையை மக்கள் மத்தியில் தோற்றுவிக்கக்கூடிய பின்புலத்தில், மனிதாய உதவிகளைத் தடுத்து நிறுத்தியிருக்கிறது என்பது மட்டுமன்றி, இதனால் ஹமாஸ் தோல்வியைத் தழுவும் என்றோ, அல்லது பணயக்கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என்ற உத்தர வாதமோ இல்லாத சூழலில் அமெரிக்க அரசு வெறுமனே கையைப் பிசைந்துகொண்டிருக்கிறது.

காஸா-இஸ்ரேல் போரைப் பொறுத்தமட் டில், அந்தப் போரின் இலக்குகள், மற்றும் சிவப்புக் கோடு போன்ற விடயங்களை வரையறை செய்து, இப்போர் தொடர்பான ஓர் ஒத்திசைவான ஒரு கொள்கையை வகுப்பதற்கு, அமெரிக்காவுக்கு ஏழு மாதகால அவகாசம் இருந்தது. ஆனால் இஸ்ரேல் தாண்டக்கூடாத சிவப்புக் கோடு எது என்பதையோ, தான் விரும்புகின்ற போர் நிறுத்தம் எப்படி அமையவேண்டும் என்பதையோ, முன்னுக்குப் பின் முரண்பாடு இன்றி, தெளிவான முறையில் வரையறைசெய்யஅமெரிக்காவால்இயலவில்லை. ஒரேயொரு ஆயுதக்கப்பல் நிறுத்திவைக்கப்பட்ட செய்தியை மட்டுமே அதாவது அந்த நடவடிக்கை இஸ்ரேல் மேல் அழுத்தத்தை ஏற்படுத்தும் என்ற பொருள்பட மேற்குலக பெருநிறுவன ஊடகங்கள் திரும்பத் திரும்பப் பேசிக்கொண்டிருக்கின்றன. ஆனால் காஸாவில் தங்கியிருக்கும் மக்களுக்கான மனிதாய உதவிகளை றாவா சந்திப்பின் ஊடாகச் எடுத்துச்செல்வதற்கு இஸ்ரேல் அனுமதிக்க வேண்டும் என்று தெரிவித்த அமெரிக்கா, அதனை நடைமுறைப்படுத்துவதற்கான எந்தவித அழுத்தத் தையும் பிரயோகிக்கவில்லை.

தற்போதுள்ள சூழ்நிலையில், காஸா மீது தான் தொடுத்த போரில், தனது இலக்குகள் என்று பகிரங்கமாக இஸ்ரேல் எவற்றை அறிவித்ததோ, அந்த இலக்குகளை அடைவதற்கு இஸ்ரேலுக்கு அமெரிக்கா எந்தவிதத்திலும் உதவவில்லை, பணயக்கைதிகளாகப் பிடித்துச்செல்லப்பட்ட இஸ் ரேலியரின் குடும்பங்களுக்கும் அது எந்தவிதத்தி லும் உதவவில்லை. அதுமட்டுமன்றி ஒரு போர்நிறுத்தத்தைக் கொண்டுவருவ தற்கோ அல்லது காஸாவுக்குள் போதிய அளவு மனிதாய உதவிகள் கொண்டு செல்லப்படுவதற்குக்கூட அமெரிக்கா உதவவில்லை. இவை எல்லா வற்றுக்கும் பதிலாக, அமெரிக்க அதிபரான ஜோ பைடன், ஒரேயொரு வேலையை மட்டுமே செய்துகொண்டிருக்கிறார். அதாவது எந்தவித இலக்குமின்றி, போரில் வெளியேறு வதற்கான எந்தவித மூலோபாயமும் இன்றி, எந்தவித அரசியல் தீர்வும் இன்றி, அல்லது போர் நிறைவுபெற்றதும் எவ்வாறான நடவடிக் கைகளை மேற்கொள்ளவேண்டும் என்ற சிந் தனையே இன்றி இஸ்ரேலின் பிரதம மந்திரி நெத்தன்யாகு வெறுமனே போரை தொடர்ந்து நீட்டிச்செல்ல மட்டும், அவருக்கு பைடன் உதவிக்கொண்டிருக்கிறார். இதிலே கவனத்தில் கொள்ளப்படவேண்டிய விடயம் என்னவென் றால், எந்தவொரு பக்கத்துக்கும் உருப்படியான விதத்தில் அமெரிக்கா உதவவில்லை என்பதே வெளிப்படையான உண்மையாகும். வோஷிங் டனில் மனச்சாட்சியுள்ள அதிகாரிகள் யாராவது இருந்தால், ஒரு தெளிவான வெளியுறவுக்கொள் கையையும் விவேகமான புலனாய்வு அதிகாரி களையும் கொண்டுள்ள வேறுநாடுகளிடம் போர் நிறுத்தத்தை முன்னெடுப்பதற்கான பொறுப்பைக் கையளிக்க வேண்டும் என்ற அழுத்தத்தை தமது சக அதிகாரிகளுக்கு அவர்கள் நிச்சயமாகக் கொடுப்பார்கள்.

**நன்றி: www.rt.com**

## போர் முடிந்த ... தொடர்ச்சி ...

பாரிய பலத்தைக் கொடுத்துள்ளன.

### ஆபத்தான பாதை

உண்மையான சமாதானத்தை நோக்கிய இலங்கை யின் பாதை ஆபத்தானதாகவே உள்ளது. தமிழர் களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்கான உண்மையான அர்ப்பணிப்பை இலங்கை அரசாங் கம் வெளிப்படுத்தத் தவறுகிறது. போர்க்கால துஷ் பிரயோகங்கள், உண்மையைச் சொல்லும் முயற்சிகள் மற்றும் இராணுவ மயமாக்கலுக்கான உண்மை யான முயற்சிகள் பற்றிய விரிவான விசாரணை இதில் அடங்கும். ஆனால், இவை எதிலாவது தம்மை ஈடுபடுத்துவது சிங்களப் பகுதிகளில் தமது அரசியல் இருப்பைப் பாதிப்ப தாக அமையும் என்பதால், சிங்களக் கட்சிகள் எதுவும் அதற்குத் தயாராக இல்லை.

சர்வதேச சமூகம் இலங்கையுடன் மீண்டும் ஈடுபட வேண்டிய தேவை உள்ளது. சர்வதேசம் தமது நலன்களுடன் இலங்கை விவகாரத்திலிருந்து ஒதுங்கிக் கொள்வதாக தமிழர்கள் கருதுவதற்கு நியாயமான காரணங்கள் உள்ளன. சர்வதேச சமூகம் மனித உரிமைகள் உறுதிமொழிகளை நிலைநிறுத்த அரசாங்கத்தை வலியுறுத்த வேண் டும். சர்வதேச அமைப்புகளின் அழுத்தம் நேர் மறையான மாற்றத்திற்கான செல்வாக்கை உரு வாக்கும். ஆனால், உலகின் பல பகுதிகளிலும் திறக்கப்பட்டுள்ள போர் முனைகளும், பொரு ளாதார நெருக்கடிகளும் இலங்கை மீதான சர்வதேச கவனத்தை பெருமளவுக்கு திசை திருப்பியுள்ளது. அந்தக் கவனத்தை மீண்டும் கொண்டுவருவதற்குத் தேவையான வலுவான தலைமையோ அதற்கான திட்டமிடலோ இல்லாததுதான் தமிழர்களின் மிகப் பெரிய பலவீனமாகும்.

போரினால் சிதைந்த உட்கட்டமைப்பை மீளக் கட்டியெழுப்புதல், வேலைவாய்ப்பை அதிகரிப்பது மற்றும் தமிழர்கள் பெரும்பான் மையாக உள்ள பகுதிகளில் உள்ள டங்கிய வளர்ச்சியை ஊக்குவித்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் வளர்ச்சித் திட்டங்கள் நீண்டகால ஸ்திரத்தன்மைக்கு அவசியம். தாயகத் திலுள்ள இளைய தலைமுறையினர் பெருவாரியாக வெளியேறுவதைத் தடுப்பதற்கு இவ்வாறு நம்பிக்கையளிக்கக்கூடிய நீண்டகாலத் திட்டங்கள் தேவை. அதற்கு வலுவான நம்பிக்கையளிக்கக்கூடிய ஒரு தலைமை அவசியம்.

ஆனால், இலங்கையில் தமிழர்களின் எதிர்காலம் நிச்சயமற்றதாகவே உள்ளது. யுத்தம் முடிவடைந்த நிலையில், சமாதானம் பலவீனமாக உள்ளது. உண்மையான நல்லிணக்கத்திற்கும் நியாயமான தீர்விற்கும் இலங்கை அரசாங்கத்தின் உண்மையான அர்ப்பணிப்பும், சர்வதேச சமூகத்தின் தொடர்ச்சியான அழுத்தங்களும், தமிழ் மக்களின் மன உறுதியும் உறுதியும் தேவை. இது ஒரு நீண்ட மற்றும் கடினமான பயணமாகும். முள்ளிவாய்க்கால்நினைவேந்தலைஅனுஷ்டிக்கும் இந்த வேளையில், எதிர்காலத்துக்கான தீர்க்கமான திட்டமிடலும் அவசியமானது என்பது உணரப்பட வேண்டும்!

• • •

## சிதைக்கப்படும் ... தொடர்ச்சி ...

இனக்கலவரங்கள் மலையக மக்களை பெரிதும் பாதித்தது. இத்தகைய நிலைமைகளினால் பெருந்தோட்டங்கள் வீழ்ச்சியுற்ற அதேவேளை சிறுதோட்டங்கள் நாட்டில் எழுச்சி பெற்றதையும் அவதானிக்க முடிந்தது. இதற்கேற்ப 1983 இல் இலங்கையின் மொத்த தேயிலை நிலப்பரப்பில் 75,769 ஹெக்டேயராக சிற்றுடைமைகளின் பரப்பு காணப்பட்டது.

இது மொத்த தேயிலை நிலப்பரப்பின் 36 வீதமாகும். 1994 இல் 76,569 ஹெக்டேயராகவும், 2005 இல் 118,274 ஹெக்டேயராகவும், 2014 இல் 132,335 ஹெக்டேயராகவும் சிற்றுடைமைகளின் பரப்பு படிப்படியாக அதிகரித்த போக்கினை வெளிப்படுத்தியது. பெருந் தோட்டக் காணிகளின் சுவீகரிப்பு உள்ளிட்ட பல நிலைமைகள் தேயிலைப் பெருந்தோட்டங்களில் பதிவுசெய்துள்ள தொழிலாளர் எண்ணிக்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தது. 1980 இல் 541,971 தொழிலாளர்கள் பெருந்தோட்டங்களில் பதிவுசெய்து கொண்டிருந்தனர். 2000 மாம் ஆண்டில் இது 277,886 ஆக வும், 2015 இல் 158,322 ஆகவும் காணப்பட்டது. சமகாலத்தில் சுமார் 130,000 இற்கும் குறைவான தொழிலாளர்களே தோட்டங்களில் தொழில் புரிந்து வருவதாக தெரிவிக்கப்படுகின் றது.

### விசேட ஜனாதிபதி செயலணி

இந்திய வம்சாவளியினருக்கு தங்கியிருக்கும் வீடு, காணி என்பவற்றுக்கு உரித்துரிமை உண்டென திரும்பத்திரும்ப பரம்பரையாக வாக்களிக்கப்பட்டது. இது இன்றும் நிறைவேற்றப்படாதுள்ளது. இச்சமூகம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன் ஏனைய சமூகங்களின் பாரபட்சத்துக்கும் உள்ளாகியுள்ளது. இச்சூழ்நிலையும், இப்பாரபட்சத்தை நீக்குவதற்கு அரசு முயலாமையும் தோட்டங்களுக்கு வெளியே இந்திய வம்சாவளியினர் சுதந்திரமாக தனது வதிவிடங்களை தேடிக்கொள்ள முடியாமல் செய்துள்ளன. பெருந்தோட்டங்களில் காணியுரிமையும் நிலப் பயன்பாடும் தெளிவாக பௌதீக ரீதியாக ஒரு இன பாரபட்சத்தை காட்டி நிற்கின்றது என்றும் புத்திஜீவிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதனிடையே மலையக மக்களுக்கு உறுதிப்பத்திரத்துடன் கூடிய 10 பேர்ச் காணியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி அண்மையில் உறுதியளித்திருந்தார். மேலும் மலையக மக்கள் தமது காணிகளில் தேயிலையை பயிரிட்டு அவற்றை தொழிற்சாலைகளுக்கு விநியோகிக்கக் கூடிய வகையில் பெருந்தோட்டத்துறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் எனவும் அதற்கு பெருந்தோட்டக் கம்பனிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டிருந்தார். இதேவேளை ஐக்கிய மக்கள் கூட்டணி அரசாங்கத்தில் ஸ்தாபிக்கப்படும் விசேட ஜனாதிபதி செயலணியின் ஊடாக பெருந்தோட்ட மக்களின் பொருளாதார சமூக அபிவிருத்தி மற்றும் அரசியல் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு வழங்கப்படும் என எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசாவும் உறுதியளித்துள்ளார்.

அத்தோடு பெருந்தோட்ட மக்களுக்கு காணியுரிமை மாத்திரமின்றி பயிர்ச்செய்கை, வீட்டு உறுதி சிறுதோட்ட உரிமை என்பவற்றை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சஜித் முன்னதாக தெரிவித்திருந்தார்.




காணியுரிமையானது சமுதாயங்களில் மக்களுக்கு அந்தஸ்து, அதிகாரம், செல்வாக்கு என்பவற்றை அளிக்கின்றது. நிலமற்ற ஏழைக் குடியானவர்கள் நிலவுடைமையைப் பெறுவதன் மூலம் சமூக அந்தஸ்தினைப் பெற்றுக் கொள்ள வாய்ப்புகள் ஏற்படும். இது சமூகத்தில் சமத்துவத்தினை வளர்க்க உதவியாய் அமையும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. காணியுரிமை என்பது பெருந்தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் மறுக்கப்பட்ட ஒன்றாகவே தொடர்ச்சியாக இருந்துவரும் நிலையில் இம்மக்களுக்கு காணிகளை பெற்றுக் கொடுக்கும் முனைப்புகளும் தொடர்ச்சியாகவே இடம்பெற்று வருகின்றன. இந்தவகையில் பெருந்தோட்ட மக்களுக்கான காணி உறுதிப் பத்திரம் இம் மாதத்தில் சாத்தியமாகும் என்று அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளமையும் இங்கு நோக்கத்தக்கதாகும். இதன் வெற்றிக்கு அனைவரும் அரசியல் தொழிற்சங்க பேதங்களை மறந்து ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அவசியமாகும்.

• • •

## முள்ளிவாய்க் ... தொடர்ச்சி ...

அரசாங்கம் அவ்வாறு மக்கள் தொகையைக் குறைத்துச் சொன்னதற்கான காரணம் என்ன என்பதை இப்போதுதான் எங்களால் புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. இந்தப் போரும் சர்வதேச மனிதாபிமான நடவடிக்கைகளுக்கு முரணாகத்தான் முன்னெடுக்கப்பட்டிருந்தது. மருத்துவமனைகள் தொடங்கம், கஞ்சிக்கு வரிசையில் நின்றவர்கள் வரையில் வயோதிபர்கள், குழந்தைகள் என்ற வேறுபாடின்றி மக்கள் கொன்று குவிக்கப்பட்டார்கள்.

அங்குள்ள மக்களுக்குத் தேவையான உணவை அரசாங்கம் வழங்காமையால் இந்தக் காலத்தில் செயற்கையாகவே உணவுத் தட்டுப்பாடு ஒன்றை அரசாங்கம் ஏற்படுத்தியிருந்தது. இதனால், மக்கள் தம்மிடம் உள்ள அரிசியைச் சேகரித்து சோறு கறிகளைச் சமைத்து உண்ண முடியாத நிலை காணப்பட்டமையால் தம்மிடம் உள்ள குறைந்த பட்ச அரிசியில் அதிகளவுக்கு நீரைச் சேர்த்து அதனை கஞ்சியாக ஒரு நாளைக்கு ஒரு வேளை என்ற நிலையில் அதனைப் பருகி உயிர் வாழ்ந்துகொண்டிருந்தார்கள்.

அந்தக்காலத்தில் கஞ்சிக்காக மக்கள் வரிசைகளில் நிற்கும் போது இடம்பெற்ற செல் வீச்சு, விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களில் பலர் கொல்லப்பட்டனர் பொஸ்பரஸ் குண்டுகள் வீசப்பட்டன. கொத்துக்கொத்தான குண்டுகள் வீசப்பட்டன. இவை அனைத்தையும் தாண்டி அந்த மக்கள் போரின் இறுதிக்காலத்தில் உண்ட உணவு இந்தக் கஞ்சி மட்டும்தான். இந்தக் கஞ்சிக்கு தேங்காயோ அல்லது வேறு சுவையுட்டிகளோ இல்லாமல் - சில இடங்களில் உப்பு சோக்கப் பட்டிருந்தது. ஆனால், சில இடங்களில் உப்புகூட சேர்க்கப்படவில்லை.

இவ்வாறான ஒரு நெருக்கடியை நாம் கடந்துவந்திருக்கின்றோம் என்பதன் ஞாபகமாக அடுத்த தலைமுறையினருக்கு இதனைக் கடத்திச் செல்லும் நோக்கத்துடனும், மக்கள் எந்தளவு துயரங்களுடனும், வடுக்களுடனும் அந்தக் காலத்தை கடந்துவந்தார்கள் என்பதை அடுத்த தலைமுறைக்குக் கடத்துவதுதான் இந்த கஞ்சி வழங்கலின் நோக்கம். இது வடக்கு கிழக்கில் மட்டுமல்லாமல் கொழும்பில் கூட கடந்த வருடம் வழங்கப்பட்டது.

**முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நடைபெறும் இந்தக் காலத்தில் தான் சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் இலங்கை வந்துள்ளார். முள்ளிவாய்க்காலில், சனிக்கிழமை நடைபெறும் இறுதி நிகழ்விலும் அவர் பங்கேற்கிறார். அவருக்கு நீங்கள் கொடுக்கப்போகும் செய்தி என்ன?**

அவர் இங்கு வந்து இங்கு இடம்பெறும் சம்பவங்களை நேரில் பாப்பது வரவேற்கத்தக்க விடயம். வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு அவர் நேரில் சென்று பொது அமைப்புக்களையும் மக்களையும் சந்திக்கும் போது, அரசாங்கம் சர்வதேசத்தை எந்தளவுக்கு ஏமாற்றியிருக்கின்றது என்பதை நேரடியாகவே பார்த்து புரிந்துகொள்ள முடியும். • • •

## முள்ளிவாய்க்கால் ... தொடர்ச்சி ...

கிழக்கில் ஒன்றுபட்ட செயற்பாடுகள் தமிழ் தேசிய பரப்பில் உள்ளவர்களிடம் இல்லை.ஆனால் தமிழ் தேசியத்திற்கு எதிராக செயற்படும் சக்திகள் இன்று ஒன்றுபட்டு செயற்படுவதன் காரணமாக அவர்கள் விதைக்கும் விதைகள் அறுவடையாகும் நிலைமையை ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கனவே பிரித்தாளும் தந்திரங்கள் ஊடாக கிழக்கில் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்துவரும் சிங்கள பேரினவாத சக்திகளுக்கு தீனிபோடும் வகையிலான செயற்பாடுகளை தவிர்த்து கிழக்கில் ஒன்றுபட்ட தமிழ் தேசிய சக்தியை உருவாக்கவேண்டியது காலத்தின் கட்டாயமாகும். முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்காக கஞ்சி பரிமாறியதற்காக கிழக்கில் மூதூர் பகுதியில் இரவு வேளையில் பெண்கள் வலுக்கட்டாயமாக இழுத்துச் செல்லப்பட்டு கைதுசெய்யப்பட்டமைக்கு இது வரையில் எந்த அமைப்பும் ஒரு எதிர்ப்பு நடவடிக்கையினையும் முன்னெடுக்காத நிலைமையே காணப்படுகின்றது.இது ஆபத்தான நிலைமையினை தமிழ் தேசிய பரப்பிற்கு வெளிப்படுத்தியிருக்கின்றது.

குறித்த பெண்கள் கைதுசெய்யப்பட்டு மறுநாளே அதற்கு எதிராக வடகிழக்கு ரீதியாக பாரிய ஆர்ப்பாட்டங்கள் அல்லது எதிர்ப்பு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தால் இன்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு இடையூறுகளை ஏற்படுத்தும் நிலைக்கு பொலிஸார் சென்றிருக்கும் நிலையிருந்திருக்காது.

கிழக்கில் ஏற்பட்டுள்ள இந்த நிலைமையினை எதிர்காலம் தொடர்பில் சிந்திக்கும் அனைத்து தமிழ் தேசிய செயற்பாட்டாளர்களும் சிந்திக்கவேண்டும். அண்மையில் மட்டக்களப்பில் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்திய பொலிஸார் உங்களுக்கும் மூதூரில் ஏற்பட்ட நிலைமையே ஏற்படும் என அச்சுறுத்திய விடயம் என்பது எங்களது ஒற்றுமையீனத்தை அவர்கள் பயன்படுத்துகின்றார்கள் என்பதே அர்த்தப்படச் செய்கின்றது.

எதிர்காலத்தில் வடகிழக்கு இணைந்த கட்டமைப்பு மற்றும் கிழக்கில் அனைவரையும் ஒருங்கிணைத்த தமிழ் தேசிய கட்டமைப்பு உருவாக்கப்படும்போது எதிர்காலத்தில் கிழக்கில் இவ்வாறான நிகழ்வுகளை நடாத்தமுடியும்.

• • •

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.